காளைச்சின்னம் எவருக்கும் இல்லை

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு

THE ELANADU
National Tamil Daily

வால்யூம் 12
இதழ் 341
தேசிய தினசரி

சாலி வெளியீடு எண் : 49
எண் : 389

யாழ்ப்பாணம் — புதன் 8 ஜூலைமீ 23 வியாழக்கிழமை 21-1-71)

இந்தியசுப்ரீம்கோர்ட் இடைக்கால தீர்ப்பு

புதுடில்லி, ஜன. 20

எதிர் வரும் இந்திய காங்கிரஸ் கட்சிகளில் காளை மாடுச்சின்னத்தை பயன்படுத்த முடியாது.

இந்த இரு கட்சிகளுக்கும் வேறு தேர்தல் சின்னங்களை தேர்தல் கமிஷன் தனித்தனியே ஒதுக்க வேண்டியிருக்கும்.

இவ்வாறு இந்திய சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்திருக்கின்றது.

ஆட்சேபமனு

காளைமாட்டு சின்னத்தை திரு. ஜகஜீவன் ராம் தலைமை காங்கிரஸ் கட்சிக்கு உரியது என தேர்தல் கமிஷன் அளித்ததீர்ப்பை எதிர்த்து திரு. நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியினர் சுப்ரீம் கோர்ட்டில் மனுதாக்கல் செய்திருக்கின்றனர் இந்த மனுமீதான தீர்ப்புவழங்கப்படுவதற்கு

(8-ம் பக்கம் பார்க்க)

அழகக்கோன் தொடர்ந்தும் மன்னர் எம். பி.

தேர்தல் ஆட்சேபமனு செலவுடன் தள்ளுபடி

கொழும்பு, புதன்

மன்னார் ஆட்சிமன்ற உறுப்பினராக திரு. வி. ஏ. அழகக்கோன் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து 'தேர்தல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதியரசர் வின்சன் தாமோதரம், செலவு தொகையுடன் தள்ளுபடி செய்தார்.

தேர்தல் ஆட்சேப மனு மீதான விசாரணை யாழ்ப்பாணம் தேர்தல் நீதிமன்றத்தில் சுமார் 1 மாதகாலம் விசாரணை செய்யப்பட்டு, தீர்ப்பளிப்பதுபின் போடப்பட்டது.

மன்னார் ஆட்சிமன்றஉறுப்பினராக திரு. வி.ஏ. அழகக்கோன் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து கடந்த தேர்தலில் மன்னாரில் ஐக்கிய தேசியகட்சி சார்பில் போட்டியிட்டவரும் மன்னார் பட்டினசபை தலைவருமான ஜனுப் ரஹீம் இந்தமனுவை தாக்கல் செய்திருந்தார்.

மனுதாரர்சார்பில் அட்வகேட் இஸடீன் முகம்மது சி.சி. அட்வகேட் குரொசட் தம்பையா, அட்வகேட் கிட் ஆகியோரின் உதவியுடனும் புறக்டர் சதீதுவின் அனுசரணையுடனும் ஆஜராகினார். எதிர்மனுதாரர் சார்பில் அட்வகேட் எம். திருச்செல்வம் கியூ. சி. அட்வகேட் ஏச். டி; தம்பையா அட்வகேட் எஸ். சிவானந்தன் அட்வகேட் ஆலால சுந்தரம் ஆகியோர் புறக்டர் பாலகுப்பிரமணியத்தின் அனுசரணையுடன் ஆஜராகினர்.

கடற்படை கைது செய்த பாஷையூர் மீனவர் விடுதலை

யாழ்ப்பாணம், வியாழக்கிழமை

அடையாள அட்டை இல்லாத காரணத்தினால் கடற்படையினரால் யந்திரப்படகுடன் கைது செய்யப்பட்ட 17 பாஷையூர் கடற்றொழிலாளர், அரசாங்க அதிபரின் உத்தரவை தொடர்ந்து நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

'கோல்டன் விரார்' என்ற யந்திரப்படகில் இரணைதீவிலிருந்து மீன் கொண்டு வந்த போதே இக்கடற்றொழிலாளர் கைது செய்யப்பட்டனர்.

பாஷையூர் மக்கள் முன்னேற்ற சங்க சனசமூக நிலைய உப-தலைவர் திரு பிலிப் அந்தோனிப்பிள்ளை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட கடற்றொழிலாளரை விடுதலை செய்யக் கோரி, அரசாங்க அதிபருக்கு மனுச் செய்திருந்தார். சில வசதிக்குறைவு காரணமாக கடற்றொழிலாளர் அடையாள அட்டைபெற முடியாமல் போய் விட்டதாகவும் மனுவில் கூறப்பட்டிருந்தது. இதைத்தொடர்ந்து கடற்றொழிலாளரை விடுதலை செய்யும்படி அரசாங்க அதிபர் உத்தரவிட்டார்.

இடைப்பட்ட காலத்தில் மீன் கொண்டு வரும்பாஷையூர் கடற்றொழிலாளருக்கு கடற்படையினால் கஷ்டங்கள் ஏற்படாதிருக்க வழி செய்யுமாறும் அரசாங்க அதிபரிடம் கோரப்பட்டுள்ளது.

வெந்நீரில் விழுந்து குழந்தை பரிதாப மரணம்

வல்வெட்டித்துறை, புதன்

ஒன்றரை வயது சுரந்திரா என்னும் பெண் குழந்தை சுடுதண்ணீரில் விழுந்து மரணமானது.

இப் பரிதாப சம்பவம் புலோலி தெற்கில் நடைபெற்றது. இக் குழந்தை புலோலி தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி வேலுப்பிள்ளை என்பவராகும்.

மேற்படி குழந்தையின் மரண விசாரணையின்போது குழந்தையின் தாயாரான வேலெட்சுமி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

நான் இடியப்பம் அவிப்பதற்கு தண்ணீர் கொதிக்கவைத்துக் கொண்டிருக்கும்வேளையில் எனது தோளில் கையைப் பிடித்துக்கொண்டு குழந்தை தவறி கொதிநீருள் விழுந்தது. அதன் உடம்பு முழுவதும் அவிந்துவிட்டது. ஆஸ்பத்திரிக்கு உடன் எடுத்துச் சென்றும் அதைக் காப்பாற்றமுடியவில்லை

டாக்டர் திருமதி எஸ். எம். சுரேந்திரகுமாரும் இம் மரணவிசாரணையின் போது சாட்சியமளித்தார். மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் தற்செயலாக ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

மாஸ்கோவில் ஒருவருக்கு மரணதண்டனை

மாஸ்கோ, ஜன. 20

சோவியத் யூனியனில் ஒருவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவரது மனைவிக்கு 3 வருடத் தொழில முகாம் கட்டாய வேலைத் தண்டனை அளிக்கப்பட்டது.

கடந்த நவம்பர் மாதம் சோவியத் விமானம் ஒன்றை ஏடனுக்குக் கடத்திச் செல்ல முயன்றதாக இவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்டார். விசாரணையின் பின் சோவியத் நீதிமன்றம் அவருக்கு மரணதண்டனையும், அவரது மனைவிக்கு 3 வருடக் கட்டாய வேலை முகாம் தண்டனையும் அளித்துத் தீர்ப்பளித்துள்ளது.

தொடர்ந்து நடக்கிறது

ஊரதீவு, புதன்

வேலணை மத்தியகல்லூரியில் எட்டாம் வகுப்பும் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் ஏழாம் வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் இவ்வகுப்புக்கள் ரத்துச்செய்யப்படும்' என்று கல்விஇலாகா அறிவித்திருந்தது.

புதிய அரசியல் அமைப்புஏற்பாடு பற்றி திரு.அமிர்தலிங்கம் கருத்து

யாழ்ப்பாணம், வியாழக்கிழமை

"புதிய அரசியல் அமைப்பு திட்டத்தில் ஸ்ரீலங்கா ஒற்றையாட்சி குடியரசாக இருக்கும் எனக் கூறப்பட்டதன் மூலம் தமிழினத்தின் சுயப்பெட்டிக்கு கடைசி ஆணி அறையப்பட்டு விட்டது. அந்நியர் இந்த நாட்டைகைப்பற்றிய போது தமிழர், தனியரசு நடத்தி வந்தார்கள். இன்று பிரித்தானியதொடர்புநீங்குவதாக இருந்தால் பழைய நிலைமைபோல் தமிழ்அரசு ஒன்று இங்கு ஏற்படவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் தமிழ்தாய் மன்றத்தின் தமிழ் விழாவில் தமிழரசுகட்சி பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

இந்நாட்டில் என்று சிங்கள அரசு இருந்ததோ அன்று தமிழ் அரசும் இருந்ததாக மகாவம்சம் கூறுகின்றது. தமிழர் ஆட்சி நடத்தினார்கள். தமிழ் மன்னர்கள் இருந்தார்கள். அந்நியர் படை எடுப்பினால் தமிழரின் தனியரசு மறைந்தது. இன்று அந்நியர் எம்மை விட்டு நீங்கும்போது மீண்டும் எமது தமிழரசுகிடைத்தேயாக வேண்டும். இதனைத்தான் இந்திய நிலைமை பற்றி கூறிய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் ஜோஷி ஒரு நாளில் கூறியிருக்கிறார் தமிழருக்கு, தமிழரசு வழங்கமறுக்கும் அரசியல் அமைப்பை தமிழர் ஏற்றுக் கொள்ளக் கூடாது. தமிழருக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

சாவகச்சேரி இந்துகல்லூரி
பழைய மாணவர் சங்க
ஆய்வுகூடத் திறப்புவிழா

மேற்படி ஆய்வுகூடத்தை கலாநிதி N. M. பெரேரா நிதி அமைச்சர் அவர்கள் 25-1-71 திங்கட்கிழமை மு ப 11 மணிக்குத் திறந்துவைப்பார்கள் அத்தருணம் பழைய மாணவர், பெற்றோர் அனுதாபிகள் அனைவரும் இவ்வைபவத்திற்கலந்து கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர்

தலைவர்
இந்துக்கல்லூரி, ப.மா.ச.
சாவகச்சேரி.
20-2-71. 2737

தொலைபேசிக்கு யாழ். செல்கின்றனர்

அல்லைப்பிட்டி, புதன்

அல்லைப்பிட்டியில் தொலைபேசி வசதி இல்லாததால் இப்பகுதிமக்கள் தொலைபேசித் தொடர்பு கொள்வதில் பெரிதும் கஷ்டமுறுகின்றனர். அவசர தேவைகளுக்கு யாழ்ப்பாணம் சென்றே இவர்கள் பிற இடங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியிருக்கிறது.

கஷ்டம்

அல்லைப்பிட்டி, புதன்

யாழ்ப்பாணத்திலிருந்து அல்லைப்பிட்டிக்கு சேவையிலீடுபடும் இ. போ. ச. பஸ் வண்டிகள் குறிப்பிட்ட நேரத்திற்கு செல்லாமையாலும் இடையிடையே இவற்றின்சேவை நிறுத்தப்படுவதினாலும்இப்பகுதிப் பிரயாணிகள் மிகுந்த கஷ்டமடைகின்றார்கள்.

அறிவித்தல்

இதுவரை காலமும் பிலிப் நேர்சிங் ஹோமில் கடமையாற்றிய தங்கள் அபிமான டாக்டர் J. J. M. மனோகரன் M B.B.S (Ceylon) அவர்கள் 15-1-71 தொடக்கம் 134, பீச்ரோட், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள சாந்தி நேர்சிங்ஹோம் & டிஸ்பென்சரிக்கு, மாறிச் சென்றுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். 218 2

கடந்த 35, வருடங்களாக அரசாங்க உப்பு இலாகாவிலும் தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்திலும் கடமையாற்றி ஓய்வு பெற்ற திருகதனகசபைக்கு செம்மணி உப்பள பொறுப்பு அதிகாரி திரு வி எஸ் இராமலிங்கமும் சக தொழிலாளர்களும் அளித்த பிரிவுபசார விழாவின் பின் எடுத்த படம் படம்: பெனடிக்ற்

வெஸ்லி சினிமா (மானிப்பாய்)

தினசரி 3 காட்சிகள்

எம். ஜி. ஆர். - சரோஜாதேவி

நடித்த

பெரியஇடத்துப் பெண்

ராணி சினிமா (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

சிவாஜிகணேஷன் -சரோஜாதேவி

நடித்த

அன்பளிப்பு

வின்ஸர் யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன் - சௌகார் ஜானகி

நடித்த

சக்கரம்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (கொழும்பு) மைலன் (கொழும்பு)

சிவாஜி - காஞ்சனா

எம். என். நம்பியார்

நாகேஷ் முத்துராமன்

இன்னும் பலர் நடித்த

சிவந்த மண்

(ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்)

கடைசி வாரம்

வெஸ்லி 2-00, 6-00, 9 30

எ. வி. எம். ராஜன் வாணிஸ்ரீ சிவகுமார் நடித்த

அன்னையும் பிதாவும்

கரணவாய் கொலை வழக்கு:

'எதிரி எனது மூத்த சகோதரியின் கணவர்'

லவ்வெட்டித்துறை, புதன்

'அண்ணா அடிக்கிறான்' என்ற சத்தம் கேட்டதும் நானும் தகப்பனாரும் வீட்டுக்கு வெளியே வந்தோம். வெளியே வந்தபோது எதிரி எனது தகப்பனாரையும் தாக்கினார். இறந்தவர் இரத்த வெள்ளத்தில் கிடந்ததைக் கண்டதும் நான் நிலத்தில் விழுத்துவிட்டேன் என்று கொலை வழக்கொன்றில் சாட்சியமளித்த கரணவாயைச் சேர்ந்த விசுவலிங்கம் மனைவி சிவபாக்கியம் என்பவர் படுத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. ஜே ஆசீர் வாதம் முன்னிலையில் கூறினார்.

இவ்வழக்கில்கரணவாயை சேர்ந்த வி நடராசா என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த க கந்தையாலை கடந்த ஆவணி மாதம் 30-ம் திகதி சகோதரியால் வெட்டிக் கொலைசெய்ததாகப் படுத்தித்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்டிருந்தது.

சிவபாக்கியம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது-

எதிரியை எனக்குத் தெரியும். அவர் எனது மூத்த சகோதரியின் கணவர் சம்பவதினம் எனக்குஞாபகமிருக்கிறது. அன்று எனது கணவர் வேலைக்குபோய்விட்டார் கணவர் வேலைக்குச் செல்லும்போது என்னை எனது தகப்பனார் வீட்டில் கூட்டிக் கொண்டுபோய் விட்டுவிட்டுத்தான் செல்லுவார். எனது தகப்பனார் வீட்டில் ஒரு கடையும் உண்டு கடையை இரவு எட்டு எட்டரை மணியளவில் பூட்டி விடுவோம். எதிரியும் அந்த வளவின் பின்பக்கத்தில் தான் இருக்கிறார். நாம் நித்திரைக்குச் சென்ற பின்னர் பத்து பத்தரை மணியளவில் அண்ணா அடிக்கிறான் என ஒரு சத்தம் கேட்டது. அப்போது ஐயாவும் நானும் வெளியே வந்ததும், எதிரி ஐயாவையும் கோடரியால் தாக்கினார். இறந்தவர் இரத்த வெள்ளத்தில் கிடந்ததைப் பார்த்ததும் நிலத்தில் விழுந்த நான், பிறகு எழும்பி வீட்டுக்குப் போய் விட்டேன். பொலிஸாருக்கும். மரணவிசாரணை அதிகாரிக்கும் வாக்குமூலமளித்தேன்.

மேல்விசாரணை இம்மாதம் 31ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நடன நாடக விழா

யாழ்ப்பாணம், வியாழ். உயர்கலைக் கல்லூரியின் கட்டிட நிதிக்காகமேற்படி கல்லூரியின் கலைக்கலைப் பகுதியினர் அளிக்கும் 'நடன நாடக விழா' இம்மாதம் 25ம் திகதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிய ஆபிரிக்க சட்ட ஆலோசனை கமிட்டித் தலைவர்

கொழும்பு, புதன்

ஆசிய ஆபிரிக்க சட்ட ஆலோசனைக் கமிட்டியின் தலைவராக ஒய்வுபெற்ற நீதிபரசர் திரு ரி. எஸ். பெர்ணண்டோ கியு சி. ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவரது பெயரை கானா பிரதிநிதி பிரேரிக்க, இந்தியப் பிரதிநிதி ஆமோதித்தார்.

திரு. ரி. எஸ். பெர்ணண்டோவை ஆமோதித்துப் பேசிய இந்தியத் தூதுக்குழுவின் தலைவர் டாக்டர் நாகேந்திரசிங் இவ்வித நிறுவனத்திற்கு தலைவராகும் தகுதி திரு. பெர்ணண்டோவிற்கு உண்டு இராணி வழக்கறிஞராகவும், அட்டார்னி ஜெனரலாகவும், சர்வதேச நீதிகள் சபையின் தலைவராகவும் இருக்கும் அவரே இத்தலைமைப்பதவிக்கும் தகுதியுடையவராவார் என்றார்.

இக்கமிட்டியின் உபதலைவராக மலேசியாவின் அட்டார்னி ஜெனரல் தான்சிறி அப்துல் கதீர்பின் யூசுப் தெரிவு செய்யப்பட்டார்.

ஸ்ரீகாலிங்கன்

இணுவில்

தினசரி 6-30, 9-30

போயா நாட்கள் 2-30

ஜெய்சங்கர் - கே. ஆர் விஜயா

நடித்த

பெண்ணே நீ வாழ்க

மனோகரா

(யாழ்ப்பாணம்)

தினசரி 6-30, 10-00 மணி

ராஜ்குமார் - ராதிகா

நடித்த

ஜாக்பாட்டில் ஸி. ஐ. டி. 999

REGAL Jaffna

Daily 3 Shows

STEVE REEVS

in

SANDOKAN THE GREAT

(Produce din Ceylon & Cinemascope)

தரம் உயர்த்தப்படும்

சங்கானை, புதன்

சங்கானை உபதபாற் கந்தோர் தரால் நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு அதற்கான ஆக்க வேலைகள் மிக துரிதமாக நடைபெற்று வருகின்றது. இது விரைவில் தபால் இலாகாவிடம் கையளிக்கப்பட்டு தபால் தந்தி தொடர்பு அமைச்சர் செல்லையா குமாரசூரியரால் திறந்துவைக்கப்படும்.

கடந்த 25 ஆண்டுகளாக சங்கானை உபதபால் நிலையமாக இருந்து வந்ததால் பொது மக்கள் சில முக்கிய தேவைகளை பூர்த்தி செய்ய வேறு தபால் கந்தோரை நாடவேண்டிய நிலை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து பொது மக்கள் அடிக்கடி தங்களுக்கு ஏற்பட்ட குறைகளை அரசாங்கத்திற்கு தெரிவித்ததின் காரணமாகவே இந்நிலையம் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

புதிய நிர்வாகம் அடுத்த மாதம் இயங்கும்

கிளிநொச்சி, புதன்

புனரமைப்புச் செய்யப்பட்ட கூட்டுறவு சமாசங்கள் அடுத்தமாதம் தொடக்கம் இயங்க ஆரம்பிக்கும். இது சம்பந்தமான சகல நடவடிக்கைகளும் பூர்த்தியாகிவிட்டதாகத் தெரிய வருகிறது. இப்புதியபுனரமைப்பின் பிரகாரம் வடபகுதியில் 20 பிரதான சமாசங்கள் இயங்கும். ஒவ்வொரு சங்கப்பிரதிநிதிகள் தெரிவில் 4 பேர் கொண்ட நிர்வாகத்தை அமைச்சரால் நியமிக்கப்படுவர். நாலு கூட்டுறவுப்பகுதி ஊழியரும் இச் சபையில் இடம்பெறுவர் ஆரம்பத்தில் கூட்டுறவுத் தொடர்புகளிலிருந்தே இச் சமாசங்களின் பொறுப்புக்களை ஏற்பாரென்றும் தெரியவருகிறது.

புதுவருட நிர்வாகிகள்

ஊரதீவு, புதன்

புங்குடுதீவு இறுப்பிட்டி சனசமூக நிலையத்தின் ஆண்டுப்பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது பின் வருவோர்புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் பெ. கார்த்திகேசு செயலாளர் எஸ். சிவலிங்கம் பொருளாளர்: க ஜெயவீரசிங்கம் உபதலைவர், க. சத்தியநாதன் உப செயலாளர், கே. வைகுந்தவாசன் விளையாட்டுத்துறை அமைப்பாளர்: தி இடுபானந்தன் நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

தென் ஆபிரிக்காவுக்கு

ஆயுதம் வழங்கும் முடிவு ஒத்திப் போடப்படலாம்?

பிரிட்டன் பணிகிறது

சிங்கப்பூர், ஜன. 20

பிரிட்டன் தென் ஆபிரிக்காவிற்கு ஆயுதம் வழங்குவது பற்றி முடிவெடுப்பதை ஒத்திப் போட இணங்கியிருப்பதாகத் தெரிகிறது. தென் ஆபிரிக்காவிற்கு வழங்கப்படும் ஆயுதங்கள் ஆபிரிக்க மக்களுக்கு எதிராக பாவிக்கப்படாமல் கண்காணிப்பதற்கும் பிரிட்டன் இணங்கி இருப்பதாகத் தெரிகின்றது.

இந்துமகா சமுத்திரத்திற் பிரிட்டன் நடுத்தர யுத்தக் கப்பல்களை பாதுகாப்புக்கு விடலாமென சில நாடுகள் அபிப்பிராயப் படுவதாகவும் அரசியல் வட்டாரங்களில் கருத்து நிலவுகிறது.

சிங்கப்பூரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சாம்ராஜ்ய பிரதமர் மகாநாட்டின் தென் ஆபிரிக்காவிற்கு பிரிட்டன் ஆயுதம் வழங்குவதில் சமரசம் காணும் இரகசியப் பேச்சுவார்த்தை தொடர்ந்து இடம்பெறும். இக் கூட்டத்திற்கு நேற்று ஆலோசகர்கள் வெளிவிவகார அமைச்சர்கள் கூட அனுமதிக்கப்படவில்லை. பிரிட்டனின் ஆயுத விநியோகம் பற்றி மீண்டும் தனது அமைச்சரவையுடன் ஆலோசனை நடத்த பிரிட்டிஷ் பிரதமர் ஹீத் விரும்புவதாக அறியப்படுகிறது.

சாம்ராஜ்ய நாடுகளின் கூட்டமொன்றைத் திருப்பவும் கூட்ட பெரும்பாலான நாடுகள் விரும்புவதாகவும், சாம்ராஜ்ய நாடுகளின் செயற்குழு திரும்பவும் கூடலாமெனவும் தெரிகிறது.

இந்துமகா சமுத்திரத்தின் பாதுகாப்பிற்காக பிரிட்டன் இராணுவத்தளம் அமைப்பதை விடுத்து, பிரிட்டனின் நடுத்தர யுத்தக்கப்பல்களை அங்கு நிறுத்தலாமென ஜமேக்கா ஆலோசனை கூறியதாகத் தெரிகிறது. இதுவும் நன்நம்பிக்கை முனையின் பாதுகாப்பிற்கும் வழியாக இருக்குமென சில நாடுகள் அபிப்பிராயப்படுவதாக அரசியல் நிருபர்கள் தெரிவிக்கின்றனர்.

தென் ஆபிரிக்காவிற்கு பிரிட்டன் மீண்டும் ஆயுதங்களை அளிப்பதென முடிவு செய்யுமானால் அது பிரிட்டனின் பொருளாதாரத்திற்கு பாதகமாகவே முடியும் எனவும், உகண்டா வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யும் பொருட்களில் 40 சதவீதமானவற்றை பிரிட்டனிடமிருந்தே இறக்குமதி செய்வதாகவும் உகண்டா பிரதமர் ஒபட்டே கூறினார்.

சாம்ராஜ்ய மகாநாட்டிலிருந்து ஆபிரிக்க நாடுகள் வெளியேற மாட்டா எனஅரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். சாம்ராஜ்ய நாடுகளிலிருந்து ஆபிரிக்க நாடுகளுடன் இலங்கை இந்தியா ஆகிய நாடுகள் வெளியேறுமானால் கனடாவும் அவற்றைப் பின்பற்றி வெளியேறும், ஆனால் இவ்விஷயமாக இந்தியா சாம்ராஜ்ய நாடுகளிலிருந்து வெளியேறு தென்று தெரிய வருகிறது.

7மணிநேரம் நடைபெற்ற இவ்விரகசியக் கூட்டத்தில் பிரிட்டன் உட்பட பல நாடுகள்கலந்துகொண்டன இம் மாநாட்டில் பிரிட்டனின் கொள்கையை சாம்பியா அதிபர் திரு. கவுண்டா கடுமையாக எதிர்த்ததாகத் தெரிகிறது.

தென் ஆபிரிக்காவிற்கு ஆயுதம் வழங்கும் பிரச்னை ஆபிரிக்க நாடுகளுக்கு மட்டுமுரிய பிரச்னையல்ல, அது மற்ற நாடுகளுக்கும் உரிய பிரச்னையாகுமென இந்தியத் தூதுக்குழுத் தலைவர் திரு. சுவரண்சிங் மகாநாட்டில் பேசுகையில் தெரிவித்தார்

பெண்கள் ஆர்ப்பாட்டம்

இன ஒதுக்கல் கொள்கை, தென் ஆபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதம் அளித்தல் ஆகியவற்றை எதிர்த்து 40 பெண்கள் மாநாட்டு மண்டபத்திற்கு முன்பு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பாகிஸ்தானுக்கு யு.எஸ். ஆயுதம்

ஜெஸ்டர் பவல்ஸ் எதிர்ப்பு

நியூயோர்க் ஜன 20

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுத உதவி அளிப்பது முன்பு செய்த தவறுகளைத் திரும்பவும் செய்வதாகும் என்று இந்தியாவுக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் திரு ஜெஸ்டர் பவுல்ஸ் குறைகூறியுள்ளார்.

அமெரிக்க செனட் துணைக் கமிட்டிமுன சாட்சியமளித்த திரு பவுல்ஸ் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு போர் ஆயுதங்களை அளிப்பதென்ற முடிவு அறிவற்றது, பழைய தவறுகளை திரும்பவும் செய்வதற்கு வழி கோலுவது.

இவ்வித ஆயுத உதவியினால் எதிர்கால தத்தில் இந்திய நகரங்கள் அழிவதற்கு இச் செயல் காரணமாகலாம், 1960-ம் ஆண்டு அமெரிக்காவிற்கு அளித்த உறுதி மொழியையும் பாராது அமெரிக்க ஆயுதங்களைக் கொண்டே பாகிஸ்தான் இந்தியா மீது தாக்குதல் நடத்தியுள்ளது. இதை நாங்கள் மனதில் வைத்திருக்க வேண்டும். முன்னைய அரசு செய்த தவறையே இப்பொழுது இருக்கும் அரசும் செய்யக்கூடாது என்று அவர் வலியுறுத்தினார்.

கப்பல் கட்டண உயர்வு பற்றி பிரதமர் சிறிமா பிரஸ்தாபம்

சிங்கப்பூர், ஜன. 20

கப்பல்கட்டணத்தை அண்மையில் பிரிட்டிஷ் கம்பனிகள் உயர்த்தியது பற்றி சாம்ராஜ்ய பிரதமர்கள் மகாநாட்டில் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரஸ்தாபித்துள்ளார்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு சாம்ராஜ்ய நாடுகள் உதவிபுரிய வேண்டும். அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு சில கடமைகள் உண்டு. சில உள்நாட்டு விஷயங்கள் காரணமாக சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்தவேண்டியது அவசியமாகிறது. சாம்ராஜ்ய நாடுகளிடையே இப்பொழுது இருக்கக்கூடிய பிணக்குகளை தொடர்ந்தும் இடுக்காது என்றே நம்புகிறேன் என்று தெரிவித்த பிரதமர், கப்பல்கட்டண உயர்வு பற்றி இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் கலந்தாலோசனை செய்திருக்கவேண்டும் இக்கட்டண உயர்வால் பாதிக்கப்படும் நாடுகளுடன் கலந்தாலோசிக்கப்படவில்லை கப்பல்கட்டண உயர்வு பற்றி பிரிட்டன் மீண்டும் ஆலோசனை செய்யுமென நம்புகிறேன் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் நாட்டின் வருடாந்த இறக்குமதி 190 வீதமாக அதிகரித்துள்ளது. இதற்கு சாம்ராஜ்ய நாடுகள் உதவி செய்யவேண்டும் ஏற்றுமதியைப் பொறுத்தவரையில் ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கு சாம்ராஜ்ய நாடுகளின் நிதிஉதவி தேவை. இதற்கான சாம்ராஜ்யநிதி அமைப்பொன்று அமைக்கப்படவேண்டியது அவசியம் இதனை அமைப்பதற்கும், கப்பல் கட்டண உயர்வை குறைப்பதற்கும் பிரதிநிதிகள் முயற்சிக்க வேண்டுமென்றார்.

அவுஸ்திரேலியாவுக்கு முன்பே தெரியும்

லண்டன், ஜன, 20

இந்துமகா சமுத்திரத்தில் பிரிட்டன் இராணுவத் தளம் அமைப்பது பற்றி முன்பே அவுஸ்திரேலியாவிற்கு அறிவிக்கப்பட்டதாக பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் திரு ஜெறிமோமோல்டின் பிரிட்டிஷ் ஆட்சிமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் இந்தச் செய்தித் தொடர்பு இராணுவத் தளம் ஆகியன பிரிட்டன் அமைப்பதற்கு அவுஸ்திரேலியாவில் பெரும் ஆதரவு தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

— —

ஆலய பரிபாலனசபை

ஊரதீவு, புதன்

புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீபால சுப்பிரமணிய தேவஸ்தான ஆலய பரிபாலன சபையின் வருடாந்தக் கூட்டம் வழக்கறிஞர் ப. கதிரவேலு தலைமையில் நடைபெற்றபோது பின் வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

அமைப்பாளர்கள்: ப. கதிரவேலு, அ. வே. இளையதம்பி, வி. இராமாநாதன். தலைவர் அ. மாணிக்கம். செயலாளர் இ. குலசேகரம்பிள்ளை. தனாதிகாரி க. தியாகராசா, எண்பரிசோதகர்கள் க. ஐயாத்துரை, சி. இரத்தினசபாபதி ஒன்பது பேர்கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

அச்சுவேலி, புதன்

அச்சுவேலி வடக்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தில் பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்றையதினம் சிறுவர் சிறுமிகளுக்கிடையே ஒரு பேச்சுப்போட்டி நடாத்தப்பட்டது சிறுவர், சிறுமிகளின் நாடகம், கிராமிய நடனம் ஆகியனவும் இடம் பெற்றன.

மனநோய் மகாநாட்டில் இலங்கையர்

மதுரை, ஜன. 20

அகிலஇந்திய மனநோய் வைத்திய நிபுணர்களின் 23-ம் மகாநாடு மதுரையில் இம்மாதம் 18-ந் திகதி தொடக்கம் நடைபெற்று வருகிறது. 22-ம் திகதியுடன் முடிவடையும் இம் மகாநாட்டில் மனநோய் சிகிச்சை சம்பந்தமான பல விஷயங்கள் ஆராயப்படுகிறது இம்மகாநாட்டில் இலங்கை மனநோய் வைத்திய நிபுணர்கள் டாக்டர்கள் ஏ. சிற்றம்பலம், ஆர். நடராசா, வி. சற்குணநாயகம், சி. அருளம்பலம், ஜி. மாட்டினஸ் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

இந்திரா காங்கிரஸ் 450 இடங்களில் போட்டியிடும்

தேர்தல் சின்ன வழக்கில் தகவல்

புதுடில்லி, ஜன. 20

பாரதீய தேசிய காங்கிரஸ் நடைபெறவிருக்கும் லோக்சபைத் தேர்தலில் 450 அபேட்சகர்களை நிறுத்தவிருக்கிறது.

இத்தகவலை காங்கிரஸ் தேர்தல் சின்ன வழக்கின் போது சுப்ரீம்கோர்ட்டில் சாட்சியமளிக்கையில் ஜகஜீவன்ராம் தலைமைக் காங்கிரஸ் பொதுக்காரியதரிசி திரு. பகுகுணா தெரிவித்தார்.

நுகத்தடி பூட்டியகாளை மாட்டுச் சின்னம் தேசிய காங்கிரசுக்கு உரியதென தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சென்வர்மா தீர்ப்பளித்ததை ஆட்சேபித்து நிஜலிங்கப்பா காங்கிரஸ் பொதுக்காரியதரிசி திரு சாதிக்அலி வழக்கொன்றை சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்திருக்கிறார்

இவ்வழக்கு விசாரணையின் போது திரு. குகுணா சாட்சியமளிக்கையில், இன்று பதவியிலிருந்துவிலகுவோரே லோக்சபைத் தேர்தலில் போட்டியிடவிடுக்கிறார்கள். 1967-ம் ஆண்டு நுகத்தடி பூட்டப்பட்ட காளை மாட்டுச் சின்னத்துடன் தேர்தலில் போட்டியிட்ட அபேட்சகர்களே இம்முறையும் தேர்தலில் போட்டியிட விடுக்கிறார்கள் ஆனால் நிஜலிங்கப்பா காங்கிரஸ் வேறு மூன்று கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுகிறது. அதில் அரைவாசி இடங்களுக்குத்தான நிஜலிங்கப்பா காங்கிரஸ் அபேட்சகர்கள் போட்டியிடக் கூடும். மற்ற இடங்களில் வேறுசின்னத்தை உடைய மற்றகட்சி அபேட்சகர்களுக்காக இவர்கள் ஆதரவு தேடுவார்கள் ஆனால் இந்திய தேசிய காங்கிரஸ் தனது சொந்தச் சின்னத்தைத் தவிர்த்தே தேர்தலில் போட்டியிடவிடுக்கிறது. எனவே, நிஜலிங்கப்பா காங்கிரசுக்கு உண்மையில் காளை மாட்டுச்சின்னத்தில் அக்கறை இல்லை என்றுகூறினார்.

ஈழநாடு
Telegram: "ELALANADU" Jaffna
Telephone: 2...
8-... 21-1-71

அரசியல் அமைப்பும் அடிப்படைத் தீர்மானங்களும் (2)

அரசியல் அமைப்பு வெளிநிவகார அமைச்சர் சமர்ப்பித்துள்ள புதிய அரசியல் அமைப்புக்கான அடிப்படைத் தீர்மானங்கள் பற்றி இன்று கூடும் வழிகாட்டு விஷயாலோசனைக் குழுக் கூட்டத்தில் அரசியல் விவகார அமைச்சர் விளக்கிக் கூறவிருக்கிறார். இந்த அடிப்படைத் தீர்மானங்களுக்கு திருத்தங்கொண்டு வரவும் சந்தர்ப்பமளிக்கப்பட்டிருக்கிறது. இதே சமயம் இந்த அடிப்படைத் தீர்மானங்கள் பற்றி ஆராய்வதற்காக அரசியல்கட்சிகளுக்கு அவசரமாகக் கூடவிருக்கின்றன. புதிய சகாப்தத்தை, புதிய சரித்திரத்தையே ஏற்படுத்தவிருக்கும் புதிய அரசியலமைப்பின் அம்சங்கள் பற்றி அவசரமில்லாமல் நுணுக்கமாகப் பரிசீலனை செய்து உலகின் இதர பல நாடுகளுக்கும் வழிகாட்டியாக இருக்கக்கூடிய அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதென்பதை மறந்து விடக்கூடாது.

இந்தப் பணியில் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த மக்களும் அவர்களின் பிரதிநிதிகளும் காட்டும் ஆர்வமும் எடுத்துக் கொள்ளும் சிரமமும் பாராட்டுக்குரியது. இதேசமயம் "இராவணன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன" என்ற மனப்பான்மையுடன் சிறுபான்மையினர் குறிப்பாகத் தமிழ் மக்களில் சிலர் புதிய சரித்திரம் உருவாக்கப்பட்டு வருகிறதென்பதைப் பற்றியோ எதிர்காலத்தைப் பற்றியோ எவ்வித அக்கறையுமில்லாமல் இப்போதைக்கு ஏதோ சில சலுகைகளைப் பெற்றுக் கொண்டால் அதுவே பெரிய காரியம் என்ற முறையில் நடந்துகொள்வது வேதனையளிப்பதாகும்.

நாட்டின் புதிய சரித்திரத்தை எப்படி உருவாக்கலாம்; அதில் தமிழ் மக்களும் எப்படிப் பங்குகொள்ளலாம்? இருபெரும் சமூகங்களும் தங்கள் மொழி, கலை, கலாச்சாரம், தனித்துவம் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாத்து அதேசமயம் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டி, நாட்டைச் சுபீட்சப் பாதைக்குக் கொண்டுசெல்வதற்கு வழி என்ன? இவை பற்றி சிந்திக்கவேண்டாமா?

இன்று ஆட்சிபீடத்திலிருக்கும் கட்சியோ கூட்டணியோ நாளை எதிர்க்கட்சியாக மாறலாம்; இன்று எதிர்க்கட்சியிலுள்ள கட்சியோ கூட்டணியோ ஆளுங்கட்சியாக மாறலாம். அரசியல் கட்சிகள் வருவோகும். அரசாங்கங்கள் மாறலாம் போகலாம். ஆனால் அரசியல் அமைப்பு அடிக்கடி வந்து போவதல்ல. அதில் திருத்தங்கள் செய்வதும் கலப்பமில்லை. எனவேதான் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும்போது நாட்டுமக்கள் குறிப்பாகச் சிறுபான்மையினர் மிக விழிப்பாக இருக்கவேண்டியது அவசியம்.

இந்த நாட்டில் வாழும் சமூகங்களுக்கிடையில் நல்லுறவும் நட்புறவும், நல்லெண்ணமும் நீண்ட காலமாக நிலவிவந்தது. 1956-ம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டதிலிருந்து தான் தேசிய ஐக்கியம் சீர்குலைந்து நாடு பலவழிகளிலும் பின் தங்கநேர்ந்தது. இதை அரசியல்விவகார அமைச்சரும் அவர் சார்ந்துள்ள லங்கா சமசமாஜக்கட்சியும் (வேறு காரணங்களுக்காக இன்று கொள்கையை மாற்றிக் கொண்டுள்ள போதிலும் மற்றும் கூட்டணியிலுள்ள கம்யூனிஸ்ட்கட்சியும் நன்கு தெரிந்துகொண்ட விஷயம். முன்னர் செய்த தவறைத் திருத்திக் கொள்வதற்கு புதிய அரசியல் அமைப்பு ஒரு வாய்ப்பாக அமைய வேண்டுமென்பதே இந்த நாட்டின் அமைதியிலும் முன்னேற்றத்திலும் ஆர்வமும்அக்கறையும் கொண்டுள்ளமக்களின்விருப்பமாகும்.

நவீன அரசியலமைப்பு அடிப்படைத் தீர்மானங்கள் இந்த விருப்பத்தையும் நம்பிக்கையையும் நிறைவேற்றக்கூடிய தாகத் தோன்றவில்லை.

தமிழ் மட்டுமே தெரிந்த தமிழ்மொழி மூலமே கல்வி கற்றவர் அரசாங்கத்துடன் தமிழில் தொடர்புகொள்ள முடியுமென காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்கா முதல் இன்றைய வின்யாட் தேதுநை அமைச்சர் வரை பல இடங்களிலும் சொல்லி வருகின்றபோதிலும் அரசாங்க அலுவலகங்களிலிருந்து சிங்களத்தில் மாத்திரம் வரும் கடிதங்களையும் பதில் கடிதங்களையும் வைத்துக்கொண்டு படும்பாடு கொஞ்சமல்ல.

ஆட்சிமன்ற நடவடிக்கைப் பதிவேட்டில் ஆங்கிலத்தில் இரண்டொருவர் பேசியிருந்தாலொழிய தமிழ்மட்டுமே தெரிந்தவரும் சிங்களம் மட்டுமே தெரிந்தவரும் முழுமையாக எதையும் அறிந்து கொள்ளமுடியாது. தமிழில் பேசுபவர்கள் குறைவாதலால், அந்த 'ஹன்சார்ட்'டிலிருந்து தமிழ் தெரிந்தவர்கள் எதையும் தெரிந்து கொள்வதற்கில்லை. சிங்களப் பேச்சுக்கள் தமிழிலும் தமிழ்ப்பேச்சுக்கள் சிங்களத்திலும் மொழி பெயர்க்கப்பட வேண்டுமென்ற யோசனை இன்னும் செயற்படவில்லை.

இந்நிலையில் எல்லாச் சட்டங்களும் சிங்களமொழியில் சட்டமாக்கப்படவேண்டுமே. அவ்வாறு சட்டமாக்கப்படும் ஒவ்வொரு கட்டத்தினதும் தமிழ் மொழிபெயர்ப்பும் இருத்தல்வேண்டும்.

"ஸ்ரீலங்காவின் அரசகரும மொழி 1956 ம் ஆண்டின் 33-ம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்திலே, ஏற்படு செய்யப்பட்டுள்ளவாறு சிங்கள மொழியாதல் வேண்டும்.

"தமிழ்மொழி பிரயோகப் படுத்த படல் 1958-ம் ஆண்டின் 28-ம் இலக்க தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கிணங்கவிருத்தல் வேண்டும்" என்று அடிப்படைத் தீர்மானங்கள் கூறுகின்றன. இவை எப்படிச் செயல்படும் என்ற சந்தேகம் எழுவது இயற்பு. தமிழ் மொழி உபயோகச்சட்டம் 1958ல் நிறைவேற்றப்பட்டது தான் அமுலாகவேயே ஒழிய 1966-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட அதன் விசேஷ விதிகளில் என்பதும் கவனத்துக்குரியது.

இவை அரசியல்நிர்ணய உறுப்பினர்களின் பரிசீலனைக்குரியவை.

வடக்கு - கிழக்கு மாகாண

நீதிமன்ற நடவடி

தமிழில் பங்குப

பதிவேடுகள் சிங்களத்தி

(நேற்றைய தொடர்ச்சி)

18. தேசிய சபையின் எந்தக் கூட்டத்தொடரின் ஆரம்பத்திலும் தேசியச்சபை, அரசாங்கக் கொள்கை பற்றிய பிரகடனத்தை நிராகரித்தால், அல்லது வரவு செலவுத்திட்டத்தை ஏற்காதுவிட்டால், அல்லது அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றினை நிறைவேற்றினால் பிரதம அமைச்சர், ஒன்றில் தமது பதவியிலிருந்து விலகல்வேண்டும்: அல்லது தேசியசபையைக் கலைக்குமாறு ஆலோசனை கூறல்வேண்டும்: எனினும் தேசிய சபையின் முதலாவது கூட்டத்தொடர் ஒன்றில் அரசாங்கக் கொள்கை பற்றிய அறிக்கை சார்பான விவாததில் அது தோற்கடிக்கப்பட்டால், ஜனாதிபதி தேசிய சபையைக் கலைப்பதற்கு மறுக்கலாம். அவ்வாறு மறுத்தால் பிரதம அமைச்சர் அவரது பதவியிலிருந்து விலகிவிட்டவராகக் கருதப்படல வேண்டும்.

19. பொதுத் தேர்தல் ஒன்றினை உடனடுத்துப் பிரதம அமைச்சர் அவரது பதவியிலிருந்துவிலகிவிட்டவராகக் கருதப்படல் வேண்டும்.

நீதிபரிபாலனம்

20 (1) தனது அதிகாரங்கள் சிறப்புரிமைகள் சம்பந்தமான விடயங்கள் தவிர, நீதிப்பரிபாலனத்துக்கும் நீதித்துறை சார்பான அல்லது ஓரளவு நீதித்துறை சார்பான முடிவுகளை செய்வதற்கும், பிணக்குகள் சார்பாக தீர்ப்பளிப்பதற்கும்: இணக்கங்களை ஏற்படுத்துவதற்கும்.. என அதன் சட்டங்களின் மார்க்கமாக தாபிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலமாக மட்டுமே, நேரடியாகவல்லாது தேசிய சபை, நீதித்துறைச் சார்பான தனது அதிகாரத்தைப் பிரயோகித்தல் வேண்டும்.

(2) தேசிய சபையினால் செய்யப்படும் வேண்டுகோள் மூலம் ஜனாதிபதியால் நீதிபரிபாலனஞ் செய்யும் ஆள் எவரும், அதற்றப்படலாம்.

(3) நீதிபரிபாலனத்தின் பொருட்டு சட்டமாத் தாபனஞ் செய்யப்படும் மிகவும் உயர்ந்த நீதிமன்றத்தின் அதிகாரங்கள், தேசிய சபையால் ஆக்கப்படும் சட்டங்கள் மூலமாக வெளிப்படையாக தவிர்க்கப்படும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனையசந்தர்ப்பங்களிலே, உயர்நீதிமன்றம் எழுத்தாணைகளின் (ரிட்) உருவிலே வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளஅத்தகையபொறுப்பாணைகளை வழங்குவதற்குரிய அதிகாரங்களையும் அடக்கிய தாயிருத்தல் வேண்டும்.

21. நீதிபரிபாலனம் செய்யும் ஆட்களின் சுதந்திரத்தைப் பாதுகாத்து உறுதிப்படுத்த ஏற்பாடு செய்யப்படல வேண்டும்.

22 தேசியசபையினால் ஆக்கப்படும் எந்தச் சட்டத்தினதும் செல்லுபடியாகும் தன்மைபற்றி விசாரிக்கவோ, தீர்ப்பு வழங்கவோ.. நீதிபரிபாலனஞ் செய்யும் எந்த நிறுவனமேனும், அல்லது ஏனைய நிறுவனமேனும், ஆளேனும் அதிகாரியேனும் தத்துவமுடையவராயிருத்தலாகாது.

நீதிமன்றங்களின் மொழி

23. ஸ்ரீலங்கா எங்கணும், நீதிமன்றங்களினதும் நீதிபரிபாலனஞ்செய்வதற்கு, சட்டமாக்கமாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள நியாய சபைகளினதும், மொழிசிங்கள மொழியாதல் வேண்டும். அதன் பிரகாரம், அந்த நீதிமன்றங்களிலும், நியாயசபைகளிலும் கையாளப்படும் வழக்குரைகள் நீதிமன்ற நடவடிக்கைகள், தீர்ப்புக்கள் சட்டங்கள் என்பனவும் நீதிமுறைச் செயல்கள் சட்ட நிறைவேற்றம் சார்ந்த செயல்கள் என்பனபற்றிய பதிவேடுகளும் உட்படவுள்ள அவற்றின் பதிவேடுகள் சிங்கள மொழியிலிருத்தல் வேண்டும் எனினும் வடக்கு கிழக்கு மாகாணங்களிலே, ஏதேனும் கிராம நீதிமன்றம், விண்ணப்ப நீதிமன்றம் நீதவான் நீதிமன்றம் அல்லது மாவட்ட நீதிமன்றம்ஒன்றின் விடயத்திலே தேசிய சபை தனது சட்டத்தினால் அல்லது அதன் பிரகாரம், வேறுவிதமான ஏற்பாடு செய்யலாம்.

24. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏதேனும், நீதிமன்றத்தின் அல்லது நியாயசபையின் முன்னருள்ள கட்சிக்காரர்களும், விண்ணப்பகாரர்களும்,

(அ) தமது வழக்குரைகள், விண்ணப்பங்கள், பிரேரணைகள் மனுக்கள் என்பனவற்றை தமிழில் சமர்ப்பிக்கலாம். அத்துடன்,

(ஆ) நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழில் பங்கு பற்றலாம்.

மேற்படி எல்லாச் சந்தர்ப்பங்களிலும்: அத்தகைய நீதிமன்றத்தின் அல்லது நியாயசபையின் பதிவேடுகளின் பொருட்டு சிங்கள மொழி பெயர்ப்பொன்று தயாரிக்கப்பட ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

25. நீதிமன்றம் ஒன்றின் அல்லது நியாய சபை ஒன்றின் நடவடிக்கைகளையறிந்து அவற்றில் பங்குபற்றுவதற்கு அங்கு உபயோகப்படுத்தப் படும் மொழியுடன் பரிச்சயமில்லாதவரான வழக்கொன்றின் கட்சிக்காரர், விண்ணப்பக்காரர், நீதிபதி, யூரிமார் அல்லது நியாய சபை உறுப்பினர் ஒவ்வொருவரும் நீதிமன்றத்தின் அல்லது நியாயசபையின் நடவடிக்கைகளை அறிந்து அவற்றில் பங்குபற்றுவதற்கு வசதி செய்வதற்காக அரசினால் வழங்கப்படும்பேச்சு மொழி பெயர்ப்பையும், பெறும் உரிமையுடையவராதல் வேண்டும். வழக்குரைகள், விண்ணப்பங்கள், பிரேரணைகள் அல்லது மனுக்கள் என்பவற்றை நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் உபயோகப்படுத்தப்படும் மொழியிலே உத்தியோகபூர்வமாக மொழிபெயர்த்துப் பெறும் உரிமையும், சிங்களத்திலே அல்லது தமிழிலே அத்தகைய பதிவின் எந்தவொரு பாகத்தையும், சட்டத்தினால் அமைக்கப்பட்டுள்ள முறைக்கு ஏற்ப, பெறும் உரிமையும் அத்தகைய உரிமையிலடங்கும்.

சட்டங்களைப் பிரசுரித்தல்

26. (1) சட்டவாக்கங்களைச் சிங்கள மொழியில் வெளியிடுவதற்கும்தமிழ் மொழியில் மொழிபெயர்த்து வெளியிடுவதற்கும் பொறுப்பளிக்கப்பட்ட ஆணைக்குழு வொன்றுநியமிக்கப்படல் வேண்டும்.

(2) மிக முக்கியமான சட்டவாக்கங்கள் (அட்டவணைப்படுத்தப்பட வேண்டியன) சிங்கள மொழியிலும், தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பிலும் வெளியிடப்படும் வரை அல்லது குறிப்பிடப்பட வேண்டிய ஒரு காலம்வரை இவற்றுள் எக்காலம் குறைந்ததோ அதுவரை நீதிமன்ற மொழிகள் தொடர்பான அரசியலமைப்பின் ஏற்பாடுகளை செயல்படுத்தல் இலகுவாக்குவதற்கு உகந்தது என இலவபான அமைச்சர் கருதும் ஏதேனும் ஒழுங்கு விதிக்கு அமைய நீதிமன்ற மொழி சார்பாக, இப்போதிருந்தவடும் ஒழுங்குகள் தொடர்ந்திருந்து வருதல் வேண்டும்.

அரசியல் அமைப்புக்கான திருத்தம்

27. (1) அரசியலமைப்பு அல்லது அதன் ஏதாவதொரு ஏற்பாடு தேசிய சபையினால் ஆக்கப்படும் சட்டமொன்றின் மூலமாக, நீக்கஞ் செய்யப்படலாம்; அல்லது எந்த முறையிலாவது திருத்தியமைக்கப்படலாம்.

(2) அரசியலமைப்பு அல்லது அதன் ஏதாவதொரு ஏற்பாடு உட்கிடையாக நீக்கஞ் செய்யப்படவோ, திருத்தியமைக்கப்படவோ, முடியாது.

(3) எச்சட்டமேனும்

(அ) அத்தகைய [illegible] த்துக்காலமசோதா [illegible] தலைப்பெயரில் அரசியலமைப்பு [illegible] அல்லது அதன் [illegible]கையை [illegible] பாட்டை நீக்கஞ் [illegible] வதற்கு அல்லது திருத்தி அமைப்பதற்கான மசோதா என விவரிக்கப்படும்.

(ஆ) அரசியலமைப்பினால் விதிக்கப்பட்ட விசேட அதிகப்படி வாக்குகள் மூலம், நிறைவேற்றப்பட்டு இருந்தாலொழிய, அரசியலமைப்பை நீக்கஞ்செய்யும் அல்லது அதன் ஏதாவதொரு ஏற்பாட்டை நீக்கஞ் செய்யும், அல்லது திருத்தியமைக்கும் படையதாயிருத்தலாகா.

28. சபாநாயகர் அபிப்பிராயப்படி அரசியலமைப்பின் ஏதாவதொரு ஏற்பாட்டிற்கு முரணாகவுள்ள ஏதேனும் ஏற்பாட்டையுடைய ஒவ்வொரு மசோதாவும் விதிக்கப்பட்ட அதிகப்படியான வாக்குகள் நிறைவேற்றப்படுவதொழிய நிறைவேற்றப்படுதல்வேண்டும்.

அரசியலமைப்பு நீதிமன்றம்

29. (I) ஒவ்வொரு தேசிய சபையினதும் விக்காலத்திலே அரசியலமைப்பு நீதிமன்றத்தை கடமையாற்றுவதற்கு ஜனாதிபதியால் நீதிதுறையிலிருந்து அடங்கிய குழாமொன்று நியமிக்கப்படல்வேண்டும். ஒவ்வொரு விவாதத்திலும் சார்பிலும், சீட்டுமூப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்படும் இவர்களுள் மூவர் அரசியலமைப்பு நீதிமன்றமாக அமைதல்வேண்டும்.

(II) ஒரு மசோதாவிலுள்ள ஏதேனும் ஏற்பாடு அரசியலமைப்புக்கு முரணானதா என்ற ஏதேனும் பிரச்னை.

(அ) அத்தகையதொரு பிரச்சினையிடுப்பதாக [illegible] த்துறை தலைமை நீதிபதி, சபாநாயகரு[illegible] ஆலோசனையினிதாக [illegible]

(ஆ) மசோதாவின் [illegible] லாவது வாசிப்புத் [illegible] யிலிருந்து ஒருவார காலத்துள், அத்தகையதொரு பிரச்சினையை எழுப்புவதும் தேசிய சபையுள்ள அங்கரிக்கப்பட்ட கட்சியொன்றின் தலைவரால் கையொப்பமிடப்பட்டதும், எழுத்திலி[illegible]

இலங்கை [illegible]டியரசாகப் பிரகடனப்படு[illegible]
சின் அரசியலமைப்புத் திட்டத்துக்கு[illegible]
படைத் தீர்மானங்களை அரசியலமைப்பு[illegible]
டர் கொல்வின் ஆர். டி. சில்வா அரசியல்[illegible]
விஷயாலோசனைக் குழுவுக்கு சமர்ப்[illegible]
களின் மேல் விபரம் இங்கு த[illegible]

ாகாணங்களில் வடிக்கைகளில் பற்றலாம் த்தில் இருக்கும்

கடனப்படுத்தப்படுவதற்கு புதிய குடியர த்துக்கும் வழிவகுக்கும். அடிப் மைப்பு அலுவலகள் அமைச்சர் டாக் அரசியல் நிர்ணய சபையின் வழிகாட்டு கு சமர்ப்பித்துள்ளார். அத்தீர்மானங் இங்கு தரப்படுகின்றன.

சட்டமேனும்:-
த்தகைய சட்ட
மசோதாஅதன்
யரில் அரசியல்
அல்
தகைய
நீக்கஞ் செய்
லது நிருத்தி
தற்கான ஒரு
என விவரிக்கப்
அரசியலமைப்பி
திக்கப்படும்
அதிகப்படியான
மூலம், அது
ற்றப்பட்டும்
லொழிய, அரசி
பை நீக்கஞ்செய்
லது அதன் ஏதா
ஏற்பாட்டை,
செய்யும், அல்லது
மைக்கும் பயனு
யிருத்தலாகாது.
பா நாயகரின்
யப்பட்ட அரசியல்
ன் ஏதாவதொரு
டிற்கு முரண்பா
ஏதே
யுடைய
மாசோதாவும்,
பட்ட அதிகப்
வாக்குகளால்
ற்றப்பட்டா
நிலையத்தெழி
டும்.

மைப்பு
றும்
) ஒவ்வொரு
பையினதும் பத
திலே அரசிய
நீதிமன்றத்தில்
ாற்றுவதற்காக,
யால் ஐந்துபேர்
குழுமொன்று
ப்படல்வேண்டும்
விளக்கத்தின்
ம், சீட்டிழுப்பின்
தேர்ந்தெடுக்கப்
யர்களுள் மூவர்,
மைப்பு நீதிமன்
அமைதல்வேண்

மசோதாவி
தேனும் ஏற்பாடு
மைப்புக்கு முர
என்ற ஏதேனும்
தகையதொரு
யிருப்பதாக சட்
தலைமை அதி
சபாநாயகருக்கு
னயளித்தான;
சோதாவின் முத
வாசிப்புத் திகதி
ஒருவார காலத்
த்தகையதொரு
வது எழுப்புகிற
தேசிய சபையி
ங்கரிக்கப்பட்ட
ன்றின் தலைவ
கையொப்பமிடப்
, எழுத்திலுள்

ளதுமான அறிவித்தல் ஒன்றினை சபாநாயகர் பெற்றால்;

(இ) மசோதாவின் முதலாவது வாசிப்புத் தேதியிலிருந்து ஒடுவார காலத்துள், குறைந்தபட்சம், தேசிய சபையின் அமர்வொன்றுக்குத் தேவைப்படும் கூட்டமர்வெண்ணுக்குப் போதுமானதாயுள்ள உறுப்பினர்களினுற் கையொப்பமிடப்பட்டதும், எழுத்திலுள்ளதும், சபாநாயகருக்கு முகவரியிடப்பட்டதுமான அறிவித்தல் மூலமாக அப் பிரச்சினை எழுப்பப்பட்டால்;

(ஈ) அத்தகையதொரு பிரச்சினை இருப்பதாக சபாநாயகர் அபிப்பிராயப்பட்டால்; அரசியலமைப்பு நீதிமன்றத்துக்கு முடிவு செய்வதற்கென சபாநாயகரால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) அரசியலமைப்பு நீதிமன்றத்தின் தீர்மானத்தை சபாநாயகர் ஏற்றுக்கொள்ளுதல்வேண்டும் அத்தீர்மானம் எல்லா நோக்கங்களின் பொருட்டும் முடிவானதாயும், எந்த நீதிமன்றத்திலும் பிரச்சினை யெழுப்பப்படமாட்டாததாயுமிருத்தல் வேண்டும்.

(4) பிரச்சினை சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டுவார காலத்துள், அரசியலமைப்பு நீதிமன்றத்தின் தீர்மானம் அறிவிக்கப்படல் வேண்டும்.

மசோதாக்களை அத்தாட்சிப்படுத்தல்

30. தேசிய சபையினால் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு மசோதாவிலும் அது உரியமுறையிலே நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும், அது அரசியலமைப்புக்கு இணங்கஉள்ளது எ ற்ற ம சபாநாயகர் தமது கைப்படவுள்ள அத்தாட்சி ஒன்றினைப் புறக்குறிப்பிடுதல்வேண்டும் அத்தகைய அத்தாட்சி எல்லா நோக்கங்களின் பொருட்டும் முடிவானதாயும், நீதி பரிபாலனத்தின்பொருட்டு, அல்லது பிணக்குகளை முடிவு செய்வதற்கு அல்லது தீர்ப்பதற்கு அல்லது இணக்குவதற்கு நியமிக்கப்படும் அல்லது தாபிக்கப்படும் எவரேனும் ஆள் அல்லது நிறுவனத்தின் முன்பு அல்லது அவரால் அல்லது அதனால் கேள்வி கேட்கப்படமாட்டாததாயுமிருத்தல்வேண்டும்.

அரசுச் சேவைகள்

31. (1) அரசுச் சேவைகளில் நியமனங்களைச் செய்தல் தொடர்பில் அமைச்சர் பேரவை பொறுப்புடையதாதல் வேண்டும்; அத்துடன் அதுபற்றித் தேசியசபைக்குப் பதில்கூறக் கடமையுடையதாதலும் வேண்டும்.

(2) அத்தகைய நியமனங்களைச் செய்வதற்கான நடவடிக்கை முறை, நியமனஞ்செய்வதற்கான அதிகாரத்தினைத் கையளித்தல், அரசுச் சேவைகளின் அமைப்பு உட்பட அரசுச் சேவைகள் பற்றிய விடயங்கள், தேசிய சபையினால் ஆக்கப்படும் சட்டங்களின் மூலமாகவும், அவற்றின் கீழும் ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

விசுவாசச் சத்தியம்

32. நீதித்துறையின் ஒவ்வோர் உறுப்பினரும், ஆயுதந் தாங்கிய படைகளின் விதிக்கப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும், மதிப்பிய அரசாங்க குடியியற்பாலனம், ஒவ்வோர் அரசாங்கக் கூட்டுத்தாபனம் என்பவற்றின் விதிக்கப்பட்ட ஒவ்வோர் உத்தியோகத்தரும், ஊழியரும் பதவிச் சத்தியம் செய்யச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட ஒவ்வோர் ஆளும் நியமனம் பெற்றதும், அரசியலமைப்புக்கு விசுவாசம் பூண்டொழுகுவதாக விதிக்கப்படும் விசுவாசச் சத்தியமொன்றை எடுத்தல்வேண்டும். விதிக்கப்படும் காலத்தினுள் விசுவாசச் சத்தியத்தை எடுக்கத் தவறும் அத்தகைய ஆள் எவரும் மேலும் சேவையில் இல்லாதொழிதல்வேண்டும்; அல்லது பதவி வகிக்காதொழிதல் வேண்டும்.

முடியின் உரிமைகளையும் கடப்பாடுகளையும் மாற்றுதல்

35 தேசியசபை வேறுவிதமாக ஏற்பாடுசெய்யும்வரை பிரிட்டிஷ் முடியினால் இலங்கையில் உடைமையிற் கொள்ளப்பட்டிருந்தது அதனால் பிரயோகப்படுத்தப்பட்டவான அல்லது பிரயோகப்படுத்தப்படக் கூடியவான எவ்வகையளவுமான, தத்துவங்கள் சிறப்புரிமைகள், பாதிப்பின்மைகள், உரிமைகள் யாவற்றையும், ஸ்ரீலங்காக் குடியரசு தனது உடைமையாக்கிப் பிரயோகப்படுத்தும். அத்துடன் அரசியலமைப்பு ஆரம்பமாவதற்கு நேர்முன்பு, இருந்துவந்தவான இலங்கையின் சார்பில் முடிக்குள்ள அத்தகைய எல்லாக் கடப்பாடுகளையும், கடமைகளையும் அவை எவ்வகையாக உண்டானவையாயினுஞ்சரி ஸ்ரீலங்காக் குடியரசு மேற்கொள்ளும்.

(37) இடைக்கால ஏற்பாடுகளில், எடுத்தாளப்பட்டுள்ள விடயங்களுள் எந்த விடயம் சார்பாகவும் அரசியலமைப்பைத் திருத்தி யமைப்பதற்காக விதிக்கப்பட்டுள்ள விசேட நடைமுறையை மேற்கொள்ளாமலும், விசேட அதிகப்படியான வாக்குகள் இல்லாமலும், தேசிய சபை சட்டமியற்றும் நீதித்துவமுடையதாயிருத்தல் எல்லாச் சட்டங்களும் அத்துடன்;

(ஆ) பிரதிநிதிகள்சபை உறுப்பினர்களுக்குள்ள உரிமைகள் சிறப்புரிமைகள் சம்பந்தமான எல்லாச் சட்டங்களும், வழக்காறுகளும், சம்பிரதாயங்களும்.

(2) 34 (1) இன் பிரகாரம், தொடர்ந்து நடைமுறையிலிருந்து வரும், அத்தகைய சட்டங்கள், வழக்காறுகள் சம்பிரதாயங்கள் என்பன தேவையான மாற்றங்களுடன், தேசியசபை உறுப்பினர்களின் தேர்தலுக்கும் அச்சபை உறுப்பினர்களின் உரிமைகள் சிறப்புரிமைகள் என்பனவற்றுக்கும் ஏற்புடையனவாயிருத்தல்வேண்டும்.

பகிரங்க சேவை ஊழியர்கள் சேவையில் தொடர்ந்திருத்தல்.

35 (1) தேசிய சபை வேறு விதமாக ஏற்பாடு செய்யும்வரை அரசியலமைப்பு ஆரம்பமாவதற்கு உடனடுத்து நேர்முன்னர் மத்திய அரசாங்கத்திலும், ஒவ்வோர் உள்ளூராட்சிச் சபையிலும் ஒவ்வோர் அரசாங்கக்கூட்டுத்தாபனத்திலும் சேவையிலிருந்த ஒவ்வொருவரும் அதேசேவை நியதி, நிபந்தனைகளுக்கு அமைவாகத் தொடர்ந்து சேவையி லிருத்தல்வேண்டும்

(2) சொல்லப்பட்ட ஆட்களுள் சத்தியப்பிரமாணம் செய்யும்படி அரசியலமைப்பினால் பணிக்கப்பட்ட அத்தகையோரும் இப்போது நடைமுறையிலுள்ள சட்டத்தின் பிரகாரம் உத்தியோகபூர்வமான சத்தியப்பிரமாணம் செய்வதற்கு அவசியமான பதவிகளிலுள்ள ஒவ்வொருவரும், அரசியலமைப்புக்கு விசுவாசம் பூண்டொழுகுவதாக விதிக்கப்படும் விசுவாசச் சத்தியமொன்றை எடுத்தல்வேண்டும். விதிக்கப்படும் காலத்தினுள் விசுவாசச் சத்தியத்தை எடுக்கத் தவறும் அத்தகைய ஆள் எவரும் மேலும் சேவையில் இல்லாதொழிதல்வேண்டும்; அல்லது பதவி வகிக்காதொழிதல் வேண்டும்.

முடியின் உரிமைகளையும் கடப்பாடுகளையும் மாற்றுதல்

36 தேசியசபை வேறுவிதமாக ஏற்பாடுசெய்யும்வரை பிரிட்டிஷ் முடியினால் இலங்கையில் உடைமையிற் கொள்ளப்பட்டிருந்தது அதனால் பிரயோகப்படுத்தப்பட்டவான அல்லது பிரயோகப்படுத்தப்படக் கூடியவான எவ்வகையளவுமான, தத்துவங்கள் சிறப்புரிமைகள், பாதிப்பின்மைகள், உரிமைகள் யாவற்றையும், ஸ்ரீலங்காக் குடியரசு தனது உடைமையாக்கிப் பிரயோகப்படுத்தும். அத்துடன் அரசியலமைப்பு ஆரம்பமாவதற்கு நேர்முன்பு, இருந்துவந்தவான இலங்கையின் சார்பில் முடிக்குள்ள அத்தகைய எல்லாக் கடப்பாடுகளையும், கடமைகளையும் அவை எவ்வகையாக உண்டானவையாயினுஞ்சரி ஸ்ரீலங்காக் குடியரசு மேற்கொள்ளும்.

(37) இடைக்கால ஏற்பாடுகளில், எடுத்தாளப்பட்டுள்ள விடயங்களுள் எந்த விடயம் சார்பாகவும் அரசியலமைப்பைத் திருத்தி யமைப்பதற்காக விதிக்கப்பட்டுள்ள விசேட நடைமுறையை மேற்கொள்ளாமலும், விசேட அதிகப்படியான வாக்குகள் இல்லாமலும், தேசிய சபை சட்டமியற்றும் நீதித்துவமுடையதாயிருத்தல்வேண்டும்.

முதலாவது பிரதம அமைச்சர்.

38 அரசியலமைப்பு ஆரம்பமாவதற்கு உடனடுத்து நேர்முன்பு, பிரதம அமைச்சர் பதவியை வகிப்பவர், அரசியலமைப்பின் கீழ் முதலாவது பிரதம அமைச்சராதல்வேண்டும்.

ஜயாறன் எழுதுவது...

"யோகிகள் கூட்டம் ரகளையில் முடிந்தது" என்ற தலைப்புடன் அமெரிக்க 'லொஸ் ஏன்ஜல்ஸ் ரைம்ஸி' பத்திரிகையில் ஒரு நீண்ட செய்தி சென்ற டிசம்பர் மாதம் 24-ந் திகதி வெளியாகியுள்ளது.

22-ந் திகதியன்று புது டில்லியிலே சர்வதேச யோகிகளின் நான்குநாள் மகாநாடு முடிவடைந்தது. கடைசிநாளன்று யோகநிபுணர்கள் ஆத்திரப்பட்டு ஒருவரை ஒருவர் தாக்கிப்பேசியதும் "இந்த மகாநாடு, யோகக்கலை, இந்தியா இவற்றுக்குப் பெரும் அவமதிப்பாகும்" என்று இம்மகாநாட்டைக் கூட்டிய பிரிட்டனைச் சேர்ந்த கிறிஸ்டோபர் ஹில்ஸ் உரக்கக்கூறி, அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார். "இந்த மாதிரியான நடத்தை நிச்சயம் யோகமல்ல" என்றார். "திரும்பிப்போ" என்று ஹில்ஸைப் பார்த்து எதிர்க் கூச்சல் எழுந்தது. அவர் வண்டனிலே ஒரு யோகநிலையத்தின் தலைவராவார்.

ஓர் இந்திய யோகி "அரசியல்" பேசுவதாயும் அதை நிறுத்த வேண்டுமென்றும் அவருக்குப் பேச அளிக்கப்பட்ட இரண்டு நிமிடங்கள் முடிந்தவிட்டதாயும் மகாநாட்டைக் கூட்டிய ஹில்ஸ் கூறியதை ஒட்டியே குழப்பம் ஏற்பட்டது.

சுவாமி தேவமூர்த்தி என்ற அந்த யோகி, ஹில்ஸும் மற்ற பிரிட்டிஷாரும் யோகத்தை கிறிஸ்தவத்துடன் குழப்பி, விடுவதாக குற்றம் சாட்டினார்.

"இந்தியாவிலே நாங்கள் பல்லாயிரக்கணக்கான வருடங்களாக யோகம் பயின்று வருகின்றோம். மேலை நாட்டினருக்கு இந்தக்கலையை அளித்தோம், இப்போது இந்த மேலைநாட்டினர் ஏதோ நாங்களே ஆதியோகிகள் என்று கருதிக்கொண்டு நமக்கு ஏதேதோ கூறுகின்றார்கள். யோகத்தை தவறாகச் செய்து நாசப்படுத்தவேண்டாம்" என்று மேற்கு ஜெர்மனியிலுள்ள ஆசிர்ன் எனும் இடத்தில் யோகக்கலை மன்றத்தை நடத்தும் அந்த சுவாமி கூறினார்.

"அமைதி ஏற்படாததால், மற்றொரு யோகியும் நியூயோர்க் நகரத்தைச் சேர்ந்தவருமான சுவாமி சச்சிதானந்தாவை அழைத்து அமைதி ஏற்படுத்துமாறு கேட்டுக்கொண்டார். அக்கூட்டத்தில் 200 பிரதிநிதிகளும் 300 பார்வையாளருமிருந்தனர்.

சுவாமி சச்சிதானந்த எழுந்து, "நாமெல்லாம் யோகிகள். ரோகிகள் (நோயாளர்) அல்லர். இதை மறவாதீர்கள். இம்மாதிரி குழப்பம் செய்வது யோகத்துக்கு அடியோடு மாறுபட்டதாகும் யோகத்தின் மூலம் நாமெல்லாம் ஒன்றுபடவேமயலுகின்றோம். யோகம் என்பதில் கருத்தென்ன? ஒற்றுமை, ஐக்கியம் என்பதுதான், நாமெல்லாம் ஒன்றுபட்டு, நல்லுறவுடன் வாழ்வோமாக!" என்றார் நியூயார்க் நகரிலே பூரணயோக நிலையத்தின் ஸ்தாபகடைரக்டராய சுவாமி சச்சிதானந்தா.

அவர் பேசிமுடிந்ததும் 10 நிமிடங்களுக்கு அமைதி நிலவியது. 'உலகயோக சபை' ஒன்றை அமைக்கவேண்டுமென்ற தீர்மானத்தை மிஸ்டர் ஹில் பிரேரிக்க அது நிறைவேறியது.

'ஓம்' என்ற கடவுள் பெயரை எல்லோரும் சேர்ந்து உச்சரிப்போம், என்று ஹில்ஸ் கூறியதற்கிணங்க, ஓம்காரத்தைப் பலரும் சேர்ந்து எழுப்பியபோது, டாக்டர் புல் சோந்தசிங்கா என்பவர் (வாஷிங்டன் யோகநிலையத் தலைவர்) மேடைக்கு பாய்ந்துவந்து "முடியாது முடியாது நீங்கள் ஏன் எனது தீர்மானத்தை ஒட்டுக்கு விடவில்லை?" என்று கூச்சலிட ஆரம்பித்தார்.

உலகமெங்குமுள்ள யோகிகளின் டைரக்டரி ஒன்றை வெளியிட வேண்டுமென்பதே அவர் கொண்டுவந்த தீர்மானம் இதைப் பற்றி ஒரு கமிட்டியின் யோசனைக்கு விட்டிருப்பதாக மிஸ்டர் ஹில்ஸ் விளக்கினார்

'ஓம்'கார கோஷம் முடிந்ததும் ஹில்ஸின் எதிரிகள் மேடைமீது ஏறி, ஒலிபெருக்கியைக் கைப்பற்றி பிரசங்கம் செய்ய முற்பட்டனர். ஆனால் ஹில்ஸின் ஆதரவாளர்களும், பிரதமர் இந்திராவின் யோக ஆலோசகருமானதீரேந்திர பிரமச்சாரியும் சுமார் 12 எதிர்ப்பாளரை மேடையிலிருந்து பின்னே தள்ளிவிட்டனர்.

மத வெறியர்களாலேயே, குழப்பம் ஏற்பட்டதாகவும் "இயேசு ஒருயோகி" என்று வெளியிட்ட ஒரு பிரசுரத்தை எதிர்ப்பவர்களே அவர்கள் என்று ஹில்ஸ் ஒரு பத்திரிகைக் காரரிடம் தெரிவித்தார்.

0 0 0

இதுநடந்த இரண்டு நாட்களுக்குள் மேற்குறித்த விவரங்கள் அமெரிக்கப் பத்திரிகையில் வெளியாகியுள்ளதிலிருந்து, யோகக் கலை விஷயத்தில், அமெரிக்கருக்கு எவ்வளவு அக்கறையுள்ள தென்பதையும் இந்தியாவில் இவ்விஷயமாக நடக்கும் கூட்டங்களை இந்திய பத்திரிகைகள் வெளியிடாதபோது அமெரிக்கர் கூர்ந்து கவனித்து வருகிறதென்பதையும் அறியக் கூடியதாகவுள்ளது. இனி இந்தியாவில் இவ்வித மகாநாட்டையோ, உலக யோக சபையையோ கூட்டவேதில்லை என்று ஹில்ஸ் தீர்மானித்துள்ளாராம்

இந்தியாவில் இவ்வித மகாநாட்டைக் கூட்டமுடியாவிடில், நமது இலங்கையில் ஏன் கூட்டக் கூடாதென்று இங்குவந்துள்ள சுவாமி சச்சிதானந்தரைக் கேட்டேன் இங்கு அப்படியான மத வெறி ஆட்டங்கள் ஏற்படாதல்லவா? பலரும் விரும்பினால் இதுபற்றி சர்வதேச யோக மகாநாட்டை இலங்கையில் நடத்த ஏற்பாடு செய்யத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார் சுவாமி அவர்கள்

உடலையும், உள்ளத்தையும் தூய்மைப்படுத்தி, சாந்தியை நிலைநிறுத்தும் யோகக் கலையை மேலைநாட்டினர் அதிலும் வாலிபர்கள் ஆண்களும், பெண்களும் அதிகமாகக் கையாண்டு பெருநன்மைபெற்றுவருகின்றனர் கல்லூரிகளிலும், பொலீஸ் பயிற்சி நிலையங்களிலும் கூட யோகப் பயிற்சிகளிக்

(8-ம் பக்கம் பார்க்க)

கலைஞர் விசுவநாதஐயருக்கு பொன்னாடை!

மாவிட்டபுரம், புதன் "கலைஞர்களுக்குடைய இலட்சணங்கள் யாவும் பொருந்திய பிரம்மஸ்ரீ விசுவநாதஐயர் தமது கலை வாழ்வில் எத்தனையோ சிறந்த வித்துவான்களை உருவாக்கியுள்ளார். அவர்கள் எல்லோரும் இன்னும் சகலராலும் பாராட்டப்படுகின்றனர். இசைக்கலைத் துறை குன்றி வரும் இன்றைய நிலையில் இவர் கலைத் துறைக்கு ஆற்றிய சேவை அளப்பரியது."

இவ்வாறு தெல்லிப்பழை அம்பலவர் கலைப்பெருமன்றம் தெல்லிப்பழையைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ ஆர். விசுவநாதஐயர் 30 வருடங்களாக இசைத்துறைக்கு ஆற்றி வரும் சேவையைப் பாராட்டும் முகமாக நடத்திய பொன்னாடை போர்த்தும் வைபவத்தில் உரையாற்றிய சக்திபூஷணம் திரு. எஸ். சண்முகரத்தினம் கூறினார்.

யாழ். ரசிகரஞ்சனி சபாவின் இசையாசிரியராகக் கடமையாற்றி இசைத்துறையில் அயராது சேவை செய்த பிரம்மஸ்ரீ விசுவநாதஐயருக்கு பொன்னாடை போர்த்தியதுடன் ஒரு பொற்கிழியும் வழங்கப்பட்டது.

கல்வி வித்தியாதரிசி திரு. க. சோமசுந்தரம் பேசுகையில் உயர்தரக் கலைஞர்கள் தமது கலைச்சேவையைவிட எதிர்காலத்தில் கலைமிளிர இரு விடயங்களை விட்டுச் செல்வார்கள். அவற்றில் ஒன்று அவர்கள் கையாளும் பாணி. மற்றது குரு. சிஷ்ய பரம்பரை இவர் பாணியை அவ்வளவு ஏற்படுத்தாவிட்டாலும் நல்ல குரு - சிஷ்ய பரம்பரை ஒன்றை உருவாக்கியுள்ளார். இப்பரம்பரை இவரது சேவையைத் தொடர்ந்துசெய்து இந்நாட்டின் கலைவளர்ச்சிக்கு உதவவேண்டும்" என்றார்.

மற்றும் திரு. உமாமகேஸ்வரன், ஆசிரியர், ஆறுமுகம் உட்பட பலர் பாராட்டுரை வழங்கினார்கள்.

தமக்களிக்கப்பட்டசேவை நலம் பாராட்டு விழாவிற்கு திரு. விஸ்வநாதஐயர் நன்றி தெரிவித்து பேசுகையில் கலைஞர்களை போற்றினால் தான் கலைவளரும் என்பதற்கிணங்க இம்மன்றம் கலைஞர்களை கௌரவிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. என்போன்ற கலைஞர்களை இப்படி கௌரவிப்பதுடன் மற்றும் கலைஞர்களையும் கௌரவித்து கலையை வர்க்கள் இம்மன்றம் மேலும் தொண்டாற்றவேண்டும்" என்றார்.

— —

அருணாசல உபாத்தியாயர் நினைவுதினம்

வாரைநகர், புதன் சைவத் தமிழாசிரியர் பலரை உருவாக்கிய திரு. அருணாசல உபாத்தியாயரின் நினைவுதினம் இம்மாதம் 17-ம் திகதி வாரைநகர் சைவமகாசபையின் ஆதரவில் சுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெற்றது.

இவ் வைபவத்திற்கு தலைமைவகித்த திரு. கு. சுப்பிரமணியம் பேசுகையில் சைவாசிரியகலாசாலையைத் ஸ்தாபிப்பதற்காக 80 ஆண்டுகள் அடும்பாடுபட்டவர். சைவத்தை வளர்க்க ஆவல்கொண்டு ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று அங்குள்ள செல்வந்தர்கள் மூலம் சைவப்பாடசாலைகளை ஸ்தாபித்தவர். ஆறுமுகநாவலர் சைவத்தையும் தமிழையும் வளர்த்தார். அருணாசலம் சைவாசிரியர்களையும்சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையையும் தோற்றுவித்தார் எனக் குறிப்பிட்டார்.

திரு. நா. சுப்பிரமணியம், திரு. வே. சுப்பையா, திரு. சி. ஆ. விநாயகசிவம்பிள்ளை உட்பட்ட பலர் உரையாற்றினர்.

இடமாற்றம்

படுத்தித்துறை, புதன் இம்மாதம் தொடக்கம் திருவாளர்கள் என். கதிரவேலு, எஸ். பாலசுப்பிரமணியம், ரி. தாமோதரம்பிள்ளை, கே. நடேசன் ஆகியோர் பருத்தித்துறை நீதிமன்றத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

0 0

வேலணை, புதன்

கொழும்பு, கொட்டாஞ்சேனை அரசினர் கலவன் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. பொ. தியாகராசா வேலணை அம்மன் கோவிலடி அரசினர் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

0 0

ஊரதீவு, புதன்

பதுளை ஸ்பிரிங்வெலி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த கே. செல்வரத்தினம், பதுளை சரஸ்வதி கனிஷ்ட சரஸ்வதிவித்தியாலயத்தைச் சேர்ந்த எம்பாலசுப்பிரமணியம், பாவற்குளம் மகாவித்தியாலயத்தைச்சேர்ந்த வி. கே. ஏரம்பு, சுந்தப்பொளை மெதடிஸ்ட் மிஷன் பாடசாலையைச் சேர்ந்த ஏ. இராமநாதன் ஆகியோர் புங்குடுதீவுப் பாடசாலைகளுக்கும், கொழும்பு இந்து கனிஷ்ட பாடசாலையைச் சேர்ந்த எம். திருஞானசம்பந்தபிள்ளை, நிக்கப்பொத்த சிரேஷ்ட தமிழ்க்கலவன் பாடசாலையைச் சேர்ந்த கே. நவராசா ஆகியோர் வேலணைக்கும் இடமாற்றம் பெற்றுவந்துள்ளனர்.

0 0

ஆனையிறவு தமிழ்க்கலவன் பாடசாலையிலிருந்து ஆசிரியர் திரு. எஸ். சுப்பிரமணியமும் கிளிநொச்சி சென். திரேசா வித்தியாலயத்திலிருந்து திரு. ஏ. அரியநாயகமும் திருகோணமலைக்கு மாற்றம்பெற்றுள்ளனர்.

ஸ்கந்தபுரம் தமிழ்க் கலவன் பாடசாலையில் இருந்து திரு. எஸ். கிருஷ்ணசாமியும், இராமநாதன் வித்தியாலயத்தில் இருந்து திரு. பி. மார்க்கண்டுவும், கிளிநொச்சி இந்து மத்திய வித்தியாலயத்தில் இருந்து திரு. எஸ். விஸ்வலிங்கமும் பண்டாரவளைக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர்.

துணுக்காய் தமிழ்க்கலவன் பாடசாலையில் பணிபுரிந்த ஆசிரியர் திரு. ரி. செல்வராசா, கிளிநொச்சி சென் திரேசா வித்தியாலய ஆசிரியர் திரு. எஸ். கனகநாயகம், கிளிநொச்சி இந்துமகா வித்தியாலயத்தைச் சேர்ந்த திரு. எஸ். நடராசா கட்டைக்காடு (முல்லையான்) ஆர். சி. வித்தியாலயத்தில் பணிபுரிந்த ஆசிரியர் திரு. ரி. அருளானந்தமும் நுவரெலியா மாவட்டத்துக்கு பெப்ரவரி முதலாம் தேதியில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பிற மொழிக்கலப்பால் தமிழுக்கு ஆபத்து

தமிழ்த்தாய் மன்ற விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், வியா. பிறமொழிச் சொற்கள் தமிழ் மொழியில் புகுந்ததன் விளைவாக இன்று இந்தியாவில் தமிழினம் 5-வது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளதை நாம் மறக்கக் கூடாது. தமிழ் மொழியின் கிளை மொழியான தெலுங்கு மொழி பேசும் மக்கள் இன்று தமிழினத்திலும் பார்க்கசுமார் 70 லட்சம் பேர் அதிகமாக இருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த நிலை ஈழத்திலும் ஏற்படாமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடந்த தமிழ் விழாவில் ஈழவேந்தன் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்த்தாய் மன்றத்தின் சார்பில் நடத்தப்பட்ட இவ்விழாவிற்கு கவிஞர் காசி ஆனந்தன் தலைமை தாங்கினார். ஈழவேந்தன் மேலும் கூறியதாவது: 61-ம் ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளி விபரப்படி இந்தியாவில் தெலுங்கு பேசும் மக்கள் 3 கோடியே 76 லட்சத்து 42 ஆயிரத்து 439 பேர் வாழ்கின்றார்கள். இந்த புள்ளி விபரத்தின்படி தமிழ் மக்கள் 3 கோடியே 4 லட்சத்து 66 ஆயிரத்து 442 பேர் வாழ்கின்றனர் தமிழினத்திலும் பார்க்க தெலுங்கு பேசும் மக்கள் 71 லட்சத்து 76 ஆயிரம் பேர் அதிகமாக வாழ்கின்றார்கள். இந்த நிலை எதனால் ஏற்பட்டது. தமிழ் மொழியுடன் பிறமொழி சொற்கள் சேர்ந்து சிதைவுற்று புதிய கிளை மொழிகள் தோன்றியதால் தான் இந்த நிலை ஏற்பட்டது. 1911-ம் ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளி விபரத்தின்படி திராவிட இனம் 6 கோடி 20 லட்சம் பேர் இருந்துள்ளதாக மறைமலை அடிகள் ஒருசமயம் தெரிவித்துள்ளார். பிறமொழி கலப்பில்லாமல் தனித் தமிழ் மொழி பேசி வந்திருந்தால் இன்று தமிழன் உயர்ந்த நிலையில் இருந்திருப்பான். தமிழ நாட்டில் ஆகாஸவாணி, நாயாபைசா, லோக்சபா, ராஜசபா போன்ற பிறத்தி மொழிகள் தமிழர் வாயில் திணிக்கப்பட்டு வருகின்றது. இதே போன்று ஈழத்தில் ஸ்ரீலங்கா ஜாதிக சம்பந்த, வக்சலா, போயா, சலுசலா போன்ற சிங்கள சொற்கள் திணிக்கப்பட்டு வருகின்றது. இவற்றை எதிர்த்து போராடாவிடில் எமது தமிழ் மொழி சிதைவற்று புதிய மொழி ஒன்று தோன்றிவிடக்கூடும். அரசியல் தலைவர்களின் உதவியுடன் ஸ்ரீலங்கா மத்திய வங்கியின் பெயரை இலங்கை மத்திய வங்கி என மாற்றியிருக்கிறோம் கொழும்பிலுள்ள தமிழ் இளைஞர்களுக்குள்ள தமிழ் உணர்ச்சியை யாழ்ப்பாணத்திலுள்ள முடியவில்லை யாழ்ப்பாணத்தில் வேட்டிசால்வை அணிந்து நெற்றியில் நீறு பூசி தங்களை அசல் தமிழர்கள் என்று கூறிக்கொள்பவர்கள், சிங்களக் கடிதங்கள் எழுதுவதையும் சிங்களத்தில் கையெழுத்து வைப்பதையும், நேரில் பார்த்திருக்கிறேன்.

தூய தமிழ் சொற்கள் இருக்க கலப்பு சொற்களையே தமிழர்கள் பாவித்து வருவது வருந்தத்தக்கது. வேட்டி என்பதை வேஷ்டி என்றும் கூறுகிறார்கள். இந்த நிலை நீடித்தால் ஆட்டுக் குட்டியை ஆட்டுக் குஷ்டி என்றும். சட்டி என்பதை சஷ்டி என்றும் கூறத் தொடங்கி விடுவார்கள். தாரம் என்பது வடமொழியில் ஆண்பாலைக் குறிக்கும். இதனை தமிழில் பெண்பாலுக்கு பாவிக்கிறார்கள் சட்டத்துறை, வைத்தியதுறை, பொறியியல்துறை எல்லாவற்றிற்கும் தூய தமிழ் சொற்கள் உண்டு. தமிழர்களே தமிழ் மொழியைக் கைவிட்டால், வேறு எந்த இனத்தவர்தான் காப்பாற்ற போகிறார்கள்.

ஒற்றுமையே விமோசனம்

திரு. கனகமனோகரன் பேசும்போது கூறியதாவது: தமிழினம் சாதி, மத பிரிவுகளால் மட்டுமன்றி இடங்களினாலும் பிளவு பட்டிருக்கும் நிலைமை மாறி ஒற்றுமை ஏற்பட்டால்தான் விமோசனம் ஏற்படும். திருமலை படிப்படியாகப் பறிபோகிறது. மலை நாட்டில் சிங்களம் திணிக்கப்படுகிறது. மட்டக்களப்பிலும் இதே நிலைதான். நமக்கென்ன என்று யாழ்ப்பாணத்தில் வாழும் நீங்கள் பார்த்துக் கொண்டிருந்தால் கடைசியில் உங்களுக்கும் அதே நிலைதான் ஏற்படும் என்பதை மறக்கக் கூடாது

ஒற்றுமைப் படுங்கள் என இடதுசாரிகள் காலநூற்றாண்டு காலமாக கூறிவருகின்றார்கள், ஆனால் அவர்கள் எதிர்பார்த்த ஒற்றுமை ஏற்படவில்லை.

அரசியல் அமைப்பு இயற்றப்படும் இந்நேரத்தில் நாம் ஒன்றுபட்டு சமஷ்டி கோரிக்கையை எழுப்ப வேண்டும். அது கிடைக்காவிடில் தனித்தமிழ் நாட்டுக்காக போராட வேண்டும்.

திரு. குறிஞ்சில் மனோகரன் பேசும்போது கூறியதாவது: மலையகத்திலுள்ள 19 லட்சம் தமிழர்களில் 10 லட்சம் இளைஞர்களும் போராடுவதற்கு தங்களை தயார் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். வடக்குகிழக்கு நீதிமன்றங்களில் மட்டும்இடம்கோரும் போது 19 லட்சம் தமிழர் வாழும் மலைநாட்டு நிதிமன்றங்களிலும் தமிழுக்குஇடம் கோரி போராட்டத்தை நடத்த வேண்டும் என தமிழரசுக் கட்சியைக் கேட்டுக் கொள்கிறேன். மலையக தமிழ்ப் பிள்ளைகளுக்கு தாய் மொழி போதனைமொழியாக இருக்கவும் பொலிஸ் நிலையங்களில் தாய் மொழியில் பதிவு செய்யவும் தமிழரசுக் கட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்நாட்டில் 66 சதவீத வருமானம் மலை நாட்டு மக்களின் கையில்தான் இருக்கிறது. ஒருமாதம் மலையக மக்கள் ஒற்றுமையாக வேலை நிறுத்தம் செய்தால் அரசாங்கத்தின் வீரப்பேச்சுகள் எல்லாம் அடங்கிவிடும் மலையகப் பிள்ளைகள் கல்வியில் பின்தங்கியுள்ளார்கள். இங்குள்ள ஆசிரியர்கள் மலையகப் பாடசாலைகளுக்கு வரமுன்வரவேண்டும்.

இன்றைய அரசாங்கம், பல்கலைக்கழக பிரவேசத்திற்கு மாணவர்களை தரம் பிரிக்கிறது தமிழ் மாணவர்கள் கூடிய புள்ளி எடுக்க வேண்டும் என்று கூறுகிறது. அமைச்சர் ஒருவர் கலப்பு திருமணம் செய்யவேண்டுமென தமிழருக்கு ஆலோசனை கூறியிருக்கிறார். சிங்களவருக்கும், தமிழ் பெண்ணுக்கும் கலப்பு திருமணம் நடந்த அவர்களுக்கு பிறக்கும் பிள்ளை, பல்கலைக்கழகத்திற்கு செல்ல முற்பட்டால் அம்மாணவனை எப்படி தரப்படுத்துவார்கள் என்பதை அந்த அமைச்சர் கூறுவாரா?

திரு. அண்ணாசாசன் கூறியதாவது: தமிழ் தாய்மன்றம், மற்ற எந்த இயக்கங்களும் செய்யாதபணியை செய்து வருகின்றது. பத்தாயிரம் உறுப்பினர்கள் சேர்ந்ததும் தமிழ் மொழியை இனத்தை வாழவைக்க திட்டமிட்ட போராட்டத்தை ஆரம்பிப்போம். எந்தக் கட்சியும் எமது மன்றத்தை கட்டுப்படுத்த முடியாது!

தமிழக சஞ்சிகைகளை முற்றாக தடைசெய்தாலும் செய்யட்டும் இன்னும் 10 வருடத்திற்குள் அதே போன்ற தமிழ் உணர்ச்சி சஞ்சிகைகளை நாம் வெளியிட்டேதீருவோம்.

திரு. பசுபதிமனோன் கூறியதாவது: தமிழன் பண்பாடு இன்றுஎந்த நிலையில் உள்ளதென்பதை நாம் இழந்திருக்க வேண்டும் உடையையும் பேச்சையும் மாற்றினால் அது பண்பாடு என்று நினைக்கின்றார்கள் 'சோசியல் என்ற பேர்வையில் பல ஆடவருடன் பழகி ஒருவனை தன் கணவனாக்குவதுதான் மேற்கத்ய பண்பாடு தமிழனின் காதல் வாழ்க்கைபற்றிகூறும் என்ன கூறுகிறார் மணவறையில் இராமனை நேரில் பார்க்காது தரவலையில் திருத்துவதுபோல் அந்த ஒளியிலே இராமனை பார்க்கிறான் சீதை இது தான் தமிழரின் பண்பாடு ஆனால் இன்று பதிவுக்குப் பின் திருமணம் நடக்கும் வரை ஒன்றாக ஆயிரம் சினிமா பார்த்து விடுகிறார்கள் மேல் நாட்டுப்பண்பாட்டினால் தமிழ் வாலிபர்களும் இளம் பெண்களும் தங்கள் வாழ்க்கையை கெடுத்துக் கொண்டார்கள் இந்த நிலைமாற நாம் தமது பண்பாட்டின் படி நடந்து கொள்ளவேண்டும்.

வல்வை வென்றது

பருத்தித்துறை, புதன் நெல்லியடி ஸ்பேஸ் விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் வல்வெட்டித்துறை புளூஸ் (ஏ) கோஷ்டியும் வதிரி அம்பான் கோஷ்டியும் மோதிய போது, புளூஸ் 8-1 கோல்களால் வெற்றியீட்டியது. தங்கவடிவேல், சதானந்தன் ஆகியோரின் ஆட்டம் பாராட்டப்பட்டது

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடந்த இப்போட்டிக்கு சி. சர்வவேஸ்வரன் மத்தியஸ்தம் வகித்தார்.

உளவு பார்த்தாராம்

பாரிஸ், ஜன. 20

பிரான்ஸ் நாட்டிற்கு எதிராக உளவு அறிந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்கு பாரிஸ் நீதிமன்றம் 13 வருடச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

ஸ்ரீலங்கா கொள்கைகள் தமிழில் கிடைக்கும்

மாவிட்டபுரம், புதன்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைத் திட்டங்கள் தமிழில் அச்சிடப்பட்டு தமிழ் மக்களுக்கு விநியோகிக்கப்படவிருப்பதாக ஸ்ரீலங்கா பொதுச் செயலாளர் கே. பி. ரத்னாயக்கா தெரிவித்தார்.

வடபகுதி விஜயத்தை மேற்கொண்டிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளரும் வினியோகத்துறை அமைச்சருமான கே. பி. ரத்னாயக்கா மேலும் தெரிவிக்கையில், இந்நாட்டில் இருபெரும் இனங்களாக வாழும் தமிழ் சிங்கள இனங்கள் ஒன்றுபட வேண்டும். அப்போதுதான் நாட்டில் ஐக்கியம் வளர்வதுடன் பிரச்னைகள் நீங்கிய நாடாக விளங்கும். ஆகவே இதற்கு சகல மக்களும் ஸ்ரீலங்கா அரசியலில் நம்பிக்கை வைக்க வேண்டும்.

தமிழ் மக்கள் நம்பிக்கை வைப்பதற்காக நாம் எமது கட்சியின் கொள்கைகள் திட்டங்கள் ஆகியவற்றைத் திருத்தி புதிய முறையில் அமைத்து தமிழில் வெளியிடவிருக்கிறோம். தமிழில் வெளியிடப்படும் போது எமது கட்சிமீது சில அரசியல்வாதிகள் கூறும் விண்பழிகளை மக்கள் உண்மையா? பொய்யா? என அறிய வாய்ப்பு ஏற்படும். அத்துடன் இரு சமூக ஐக்கியத்துக்கும் வழி வகுக்கும்.

எமது கட்சியின் கிளைகளையும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமைக்க இருக்கிறோம். கிளைகள் அமைப்பது கட்சியை வளர்க்கமட்டுமல்ல இனங்களிடையேஒற்றுமை ஏற்படுத்துவதுடன் மக்களுக்குள்ள பிரச்னைகள் குறைகள் ஆகியவற்றை நேரடியாக அறிந்து பிரச்னைகளை தீர்க்க வழி ஏற்படுத்துவதற்காகவும்தான் என்றார் அவர்.

ஆராய்ச்சிக்கு ஆயிரம் ஏக்கர் நிலம்

சென்னை, ஜன.20

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கென சென்னையில் ஆயிரம் ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந் நிலையத்துக்கான 3 வருடகால நடைமுறைச் செலவையும் ஒரு வருடச் செலவையும் தமிழ் நாடு அரசு ஏற்றுக் கொள்ளும்.

இந் நிறுவனத்திற்கு யுனெஸ்கோ நிதி உதவி அளிக்கவிருப்பது தெரிந்ததே.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வியா. 21—1—71

(செய்திகள்: காலை 6-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அலைவரிசை 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 படப்பாட்டுக்கள் 8-00 இசைவேளை, 8-15 இன்னிசை மியூசிக்கல்,

344 மீ. அலைவரிசை 49 மீ

பகல் 12-00 நண்பகல் இசை, 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அலைவரிசை 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்தநினைவாழ்த்துக்கள், 5-30 இளைஞர் கண்டுபிடிப்பு

இரவு 6-15 மெல்லிசைப் பாடல்கள், 6-30 உலகமேடை, 7-00 கானமஞ்சரி 7-15 வீணை - மனோரஞ்சிதம் லோகேஸ்வரன், 7-45 உரைநிகழ்ச்சி - வி. பொன்னம்பலம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-30 செய்தித் தொகுப்பு.

சைவத்தை மறக்கும் இளைஞர் போக்கு

சுந்தரர் கவலை

மாவிட்டபுரம், புதன்

இன்றுவாலிபர்கள் உத்தியோகம் கிடைத்தால் போதும்சைவம் எப்படியாவதுபாகட்டும்என்றுநினைக்கின்றார்கள். இம் மனப்போக்கு மேலும்வலுவடைந்தால் சைவம் அழியும் நிலை ஏற்படலாம் ஆகவே இந்த நிலைமாற்றப்பட வேண்டும்

இவ்வாறு மாவைக்கந்தன் மார்கழி மாதப் பஜனைச் சபையில் 32வது ஆண்டுப் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் வவனியா முன்னாள் எம்.பி. திரு. வி. சுந்தரலிங்கம் கூறினார்.

மாவை பிரதம குரு பிரம்மஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள் தலைமையில் மாவைக் கந்தன் ஆலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் படிக்கும் பிள்ளைகளாக இருந்தாலும் சரி விஞ்ஞானத் துறையில் உயர்ந்தவர்களாக இருந்தாலும்சரி சைவத்தை மறந்தவர்க்கு அதனால் பயனில்லை. ஆகவே சைவத்தைப் போற்றவேண்டும் என்றார்.

சைவ அனுட்டான பாதுகாப்புச் சபைத் தலைவர் ரி சிவலிங்கம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் பிரதம குரு பிரம்மஸ்ரீ சு. து சண்முகநாதக் குருக்கள் ஆசிரியர் ஏ. ரி பொன்னுத்துரை பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, டாக்டர் இ. ராஜேந்திரா பொன்னம்பலச் சுவாமி உட்பட பலர் பேசினார்கள்.

கீதா பவனம்

புதுச்சேரி, ஜன.20

மக்களிடையே பகவத் கீதையின் தத்துவங்களை விளக்கி, மக்களை நெறிப்படுத்தும் கீதபவனம் என்று ஒன்று புதுச்சேரியில் உருவாக்கப் பட்டுள்ளது.

இந்த இயக்கத்தினை புதுச்சேரி கவர்னர் ஆரம்பித்து வைத்துள்ளார் சமுதாயத்தி தீமை அகன்று நெறி நிலைக்க இவ்வியக்கம் பயன்படுமென்றும், ஜாதி வித்தியாசம் பாராடாது சகலரும் சமஸ்கிருத மொழியை அறிந்திருக்க வேண்டுமென்றும் கவர்னர் தெரிவித்துள்ளார்.

சக்தி வாய்ந்த
சர்வ பூச்சி நாசினி

பொலிடோல் ஈ 605

எல்லாக் கிருமிப் பீடைகளையும் இல்லாதொழித்து, பயிர்கள் செழிக்கவும் விளைச்சல் பெருகவும் செய்வது பொலிடோல்.

அழுக்கணவன், ஒட்டுண்ணி, பயிர்ப்பேன், பனிப்பூச்சி, இலையரிப் புழு போன்றவற்றை அது அடியோடு தொலைத்துவிடும்.

நெல், புகையிலை, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், காய்கறி முதலிய எவ்வித பயிர்ச் செய்கையையும் பாதிக்கும் எல்லாவித பூச்சி, புழுக்கள், கிருமிகளையும் அழிக்கும் சக்தி வாய்ந்தது— பொலிடோல்.

100 சீ. சீ. (4 அவுன்ஸ்) விலை— ரூ. 5/50
250 சீ. சீ. (9 அவுன்ஸ்) விலை— ரூ. 11/-
1000 சீ. சீ. (35 அவுன்ஸ்) விலை— ரூ. 37/-

பொலிடோல் ஒரு பேயர் தயாரிப்பு. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள்—
பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.

மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்: பேயர், ஜெர்மனி

இலங்கையில் தயாரிப்போர்: ஹேக்கெம் லிமிட்டெட் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

பாவனையாளருக்கு
ஓர் அறிவித்தல்

பொலிடோல் ஈ 605

சக்தி வாய்ந்த சர்வ பூச்சி நாசினியான

பொலிடோல் ஈ 605

ஜெர்மனியைச் சேர்ந்த பேயர் நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் இலங்கையில் தயாரிக்கப்படுகிறது.

கடினமான தரக் கட்டுப்பாட்டின் கீழ் தயாரிக்கப்படும் பொலிடோல் ஈ 605 அலுமினியக் கொள்கலங்களில் தற்போது கிடைப்பினும், சில கட்டுப்பாடுகளின் விளைவாக, இனிமேல் இவற்றை இறக்குமதி செய்யமுடியாது. எனவே, கையிருப்பு முடிந்ததும்

100 சீ. சீ; 250 சீ. சீ; 1,000 சீ. சீ.
அலுமினியக் கொள்கலங்களுக்குப் பதிலாக,
4 அவுன்ஸ், 10 அவுன்ஸ், 16 அவுன்ஸ்

போத்தல்களில் இதை விற்பனை செய்யவிருக்கிறோம். இதனால், சிக்கன அளவில், குறைந்த விலையில், பாதுகாப்பான முறையில் பொலிடோல் ஈ 605 பாவனையாளருக்குக் கிடைக்கும்.
தரத்தில் எவ்வித மாற்றமும் இல்லாத பொலிடோல் ஈ 605, பேயர் வியாபாரச் சின்னத்துடனேயே விற்பனையாகும்.
துண்டுப்பிரசுரத்தில் காணும் பாதுகாப்பு விதிகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கவும்.

புதிய விலைகள் வருமாறு:

4 அவுன்ஸ் போத்தல்	—	ரூ. 5/-
10 அவுன்ஸ் போத்தல்	—	ரூ. 10/50
16 அவுன்ஸ் போத்தல்	—	ரூ. 16/50

எல்லாக் கிருமிப் பீடைகளையும் இல்லாதொழித்துப் பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் - பொலிடோல் ஈ 605.
நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும்
இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி,
கொழும்பு—10

மீன்பிடித் தொழில் இயந்திர மயமாகும்

நால்வருக்கு ஒரு வள்ளம்

கோட்டை, செவ்வாய் மீன்பிடித் தொழில் இயந்திர மயமாக்கும் அவசரத் திட்டம் ஒன்றை அமுலுக்கு கொண்டுவர கடற்றொழில் அமைச்க முடிவு செய்துள்ளது. இத்திட்டத்துக்கமைய 1கோடியே 50 வட்சம் ரூபா செலவிடப்படுமென்றும்இவ்வாண்டு முடிவுக்குள்500வள்ளங்கள் மீன்பிடித் தொழிலாளருக்கு வழங்கப்படுமென்றும் கடற்றொழில் அமைச்சர் ஜோர்ஜ் ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

தொழிலாளருக்கு வழங்கப்படும் வள்ளம் ஒன்றின் பெறுமதி மு ப் ப தினாயிரம் ரூபா வாகும். இந்த வள்ளங்கள் நான்கு தொழிலாளருக்கு ஒன்றாக கூட்டுறவு சங்கங்கள்மூலம் வழங்கப்படும்.

காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மீன்பிடித் தொழிலாளருக்கு கூட்டுறவு இயக்கங்கள் மூலம் உதவுமென்றும்,எதிர்காலத்தில் வீட்டுத் திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கயானா பிரதமர் 23ல் இலங்கை வருகிறார்

கோட்டை,செவ்வாய் கயானாப் பிரதமர் போப் பென்ஹாம் இம்மாதம் 23ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்கிறார்.இவர் 27ம் திகதி வரை இங்கு தங்கியிருந்து கண்டி,சிகிரியா ஆகிய சரித்திரிப் பிரசித்தி பெற்ற இடங்களைப் பார் வை யி டு வார்.இவருடன் லண்டனிலிருக்கும் கயானா தூதுவர், கயானா வெளிவிவகார அமைச்சர் ஆகியோரும் வருகின்றனர்.

கயானா பிரதமருக்கு பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா விருந்தளித்துக் கௌரவிப்பார். திரு பென்ஹாம் உலக விவகாரம்பற்றி உரை நிகழ்த்துவார்.

புதிய காரியாலயம்

தாவடி, செவ்வாய் உடுவில் கிராம சபையின் புதிய காரியாலயம் நேற்றைய தினம் மாலை, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு கே நல்லநாதனால் திறந்துவைக்கப்பட்டது.

உடுவில் கிராம சபைத் தலைவர் திரு ச முத்துலிங்கம் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் உடுவில் எம்பி திரு வி தர்மலிங்கமுட்பட பலரும் கலந்துகொண்டனர்.

தியாகராஜ உற்சவத்தில் இலங்கைக் கலைஞர்கள்

மாவிட்டபுரம், செவ்வாய் தமிழக தியாகராஜ உற்சவத்தில் இவ்வருடம் இலங்கைக் கலைஞர்களுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் தியாகப்பிரமத்தின் சமாதி முன்றலில் சென்ற வெள்ளிக்கிழமை முதல் நடைபெற்று வரும் 144-வது தியாகராஜ உற்சவத்தில் இலங்கை தவில், வயலின் வித்துவான்களுக்கு இடம் அளிக்கம்பட்டுள்ளது.

அண்மையில் சென்னையில் நடந்த இசைவிழாவில் இலங்கைக் கலைஞர்களுக்கு சொற்ப இடங்கள் அளிக்கப்பட்டபோதும் இத்தியாகராஜர் விழாவில் ஓரளவு கூடுதலான இடம் அளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆத்மீக உணர்வு ஏற்படவேண்டும்

மாவிட்டபுரம், செவ்வாய் "பாடுபட்டு உழைக்கும் மனிதன் வீணான வழியில் தமதுபணத்தைச் செலவிடாமல்பாழடைந்துள்ளஆலயங்களை திருத்தியமைத்து ஆத்மீக உணர்வை ஏற்படுத்தினால்தான் சைவம் வளர்வதுடன் அவனும் நல்ல நிலையை அடைய முடியும்"

இவ்வாறு கன்னாகம் கதிரமலை சிவன்கோவில் பிரதம குரு பிரம்மஸ்ரீ நா. சோமஸ்கந்த குருக்கள் கட்டுவன் வாரங்கனை வைரவர் ஆலய கும்பாபிஷேக விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

மேற்படி ஆலய புனரமைப்பு வேலைகள் நடைபெற்று இன்று காலை கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது கும்பாபிஷேகத்தையடுத்து மகா அபிடேகம் நடைபெற்றது தொடர்ந்து பத்து தினங்களி விசேட அபிஷேகம் பூசைகள் நடைபெறவிருக்கின்றன. .....

உதவிக்கல்வி அமைச்சர் திறந்துவைப்பார்

நெடுங்கேணி, செவ். உதவிக் கல்வி அமைச்சர் திரு. பி. வை. துடாவை எதிர்வரும் 27-ம் திகதி நெடுங்கேணிக்கு விஜயம் செய்யவிருக்கிறார். அவர் நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் புதிதாகக் கட்டப்பட்ட விஞ்ஞானப் பாடசாலைக்கட்டிடத்தை திறந்து வைக்கவிருக்கிறார். அமைச்சருக்கு பொது வரவேற்பொன்றை அளிக்கப் பெற்றோர்-ஆசிரியர் சங்கம் முடிவு செய்துள்ளது.

.....

தந்தித் தொடர்பு பற்றி ஆராய உப குழு

கோட்டை,செவ்வாய் தந்தி தொடர்பு நடவடிக்கைகளை ஆராய்வதற்கு தபால் தந்தித் தொடர்பு அமைச்சர் திரு செ.குமாரசூரியர் உப குழுவொன்றை நியமித்துள்ளார். இக் குழு தந்தித் தொடர்பு பற்றிய குறைபாடுகளை ஆராய்ந்து இடைக்கால அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கும். மாவட்ட ரீதியில் தந்தித் தொடர்பு பற்றிய நடவடிக்கைகளையும் இக்குழு ஆராயவுள்ளது.

ஆபிரிக்கத்

தலைவர்களுடன் ஸ்ரீமாவோ பேச்சுவார்த்தை

சிங்கப்பூர், ஜன.19 சிங்கப்பூரில் நடைபெறும் சாம்ராஜ்ய பிரதமர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளும் எட்டு ஆபிரிக்க நாட்டுத் தலைவர்களை பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இப் பேச்சுவார்த்தை பிரதமர் தங்கியிருக்கும் இடத்திலேயே நடைபெற்றது.

தமிழ்விசேஷ உபயோகச் சட்டம் நீக்கப்படுமா?

கோட்டை,செவ் தனிச்சிங்களச் சட்டம் தீவிரமாக அமுல்நடத்தப்படும் இதற்கான மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாக தெரியவருகிறது.

தற்போது பிரிவுக் கவுன்சிலின் தீர்ப்பை மொழித் தகராறு பற்றிய திரு சோடிஸ்வரனின் வழக்கு எதிர்பார்த்திருக்கின்றது. இவ் வழக்கின் தீர்ப்பை எதிர்பார்த்து இம்மசோதாவும் தாமதப்படுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது

புதிய மசோதா கொண்டு வரும்போது தமிழ் விசேட உபயோகச்சட்டம் நீக்கப்படுமெனத் தெரியவருகிறது தமிழ்விசேட உபயோகச்சட்டம் வடக்குகிழக்கு மாகாணங்களின் நிர்வாகம் தமிழில்நடைபெற வேண்டும் எனக் கூறுகின்றது.

பரந்தனில் நவீனசந்தை

கிளிநொச்சி, புதன் கிளிநொச்சிப் பட்டின சபையினர் பரந்தனில் 40,000 ரூபா செலவில் நவீன சந்தை ஒன்றை அமைக்க முடிவுசெய்துள்ளனர். இதற்கான வேளிப்பத்திரங்கள் விரைவில் கோரப்படவிருக்கிறது

கிளிநொச்சி பட்டின சபையின் புதிய கட்டிட வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

.....

தாமதம்

அம்பன், புதன் குடத்தனை நாகர்கோயில் உபதபாற்கந்தோர்கள் மூலமாக விநியோகம் செய்யப்படும் தபால்களில் கூடுதலானவை ஒருநாள் பிந்தியே விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. கரவெட்டி தபாற் கந்தோரின் நிர்வாகத்தின்கீழ் இயங்கிவந்த மேற்படி இரு உபதபாற் கந்தோர்களும் படுத்தித்துறை தபாற்கந்தோரின் நிர்வாகத்தின்கீழ் இயங்கிவருவதால் தபால்கள் பிரித்தனுப்பும் உத்தியோகத்தர்கள் முன்புபோல் தற்பொழுதும் கரவெட்டி தபாற்கந்தோருக்குப் பிரித்தனுப்புவதாக தாமதத்திற்குரிய காரணமெனத் தெரியவருகின்றது.

ஆலய உற்சவம்

அம்பன், புதன் மந்திகை ஸ்ரீபத்திரகாளி அம்மன்கோவில் நேற்றுமுன் தினம் கொடியேற்றப்பட்டது. வருட ஆரம்பத்தில் வடமராட்சிப் பகுதியில் முதன் முதலாகக் கொடியேறும் ஆலயம் இதுவே. இங்கு 15 நாட்கள் திருவிழா நடைபெறும். இந்நாட்களில்இங்கு விசேட மேளக் கச்சேரிகள் இன்னிசை விருந்துகள் விசேட பூசைகள் ஆதியன இடம்பெறவுள்ளன.

இப்படித்தான் இருக்கவேண்டும்

நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் 6 ம் பக்கத்தில் "தமிழர்களின் மொழிப் பற்றை மதிக்கின்றோம்" என்ற தலைப்பின் கீழே உள்ள செய்தியில் விழாவில் சிறப்புச்சொற்பொழிவாளராகக் கலந்துகொண்ட திரு. நாவேந்தன் என்றிருப்பது தவறு. திரு ஈழவேந்தன் என்றிருக்க வேண்டும்.

.....

உடைந்தபாலம்

அல்லைப்பிட்டி, புதன் புங்குடுதீவையும், வேலணையையும் இணைக்கும் அம்பலவாணர் பாலம் எந்நேரமும் உடைந்துவிளக்கூடிய நிலையில் இருக்கின்றது.

புதிய அரசியல் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பிரதேசம் இந்த நாட்டில் இல்லா விட்டால் தமிழர் வாழவே முடியாது.அந்நியர் இந்த நாட்டில் காலடி எடுத்து செல்லமுன் எந்த நிலை இருந்ததோ அதே நிலைதான் அவர்கள் விட்டுச் செல்லும் போது ஏற்பட வேண்டும்.

தமிழனை தற்கொலை செய்விக்கும் முயற்சிதான் இன்று நடக்கிறது. இதற்காக சிலர் தமிழ் பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர்கள் வேண்டும் என்கிறார்கள். தமிழர்கள் மும்மொழிகளையும்கற்பதால் ஏற்படும் சிக்கலில் திண்டாட, திண்டாட சிங்களவர்கள் கல்வியில் முன்னேறி விடுவார்கள். பல்கலைக் கழகங்களிலும் தமிழருக்கு வருங்காலத்தில் இடமில்லாத நிலைமை ஏற்படும்.

தமிழ் பாடசாலைகளில் சிங்களம் ஒருபாடமாக போதித்தும் பிரச்னை தீராவிடில் சிங்களத்தை போதனு மொழியாக்க முயற்சி எடுக்கப்படும் ரோயல் கல்லூரியில் பல தமிழர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சிங்களத்தை போதனு மொழியாக்கியிருக்கிறார்கள தமிழருக்கு உள்ள ஒரேஒரு வேலை ஆசிரியர் வேலைதான். இங்கு சிங்களம் போதனு மொழியாக்கப்பட்டால், தமிழருக்கு அந்த வேலையும் கிடைக்காமல் போய்விடும். உலகில் எந்த மொழியும் தெய்வத்தோடு ஒப்பிடப்படவில்லை. தமிழன் தன் மொழிக்கு பரம்பொருளின் இடத்தை கொடுத்திருக்கிறான். அப்படிப்பட்டமொழிமை அழிய விடலாமா?

அரசியல் அமைப்பு திட்டத்தில் சிங்களம் ஒன்றுதான் ஆட்சிமொழி விரும்பினால் தமிழுக்கும் இடம் கொடுக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. இந்நாட்டின் எந்தப் பாகத்திலும் நீதிமன்றங்களில் சிங்களத்தில் பதிவு செய்யப்படும் என்று கூறப்படுகிறது. தமிழ் பகுதி நீதிமன்றங்களில் தமிழில் பதிவு செய்யப்பட வேண்டியது அவசியம்.

சிங்கள சகோதரர்களின் ஒத்துழைப்புடன் எமது நாட்டை நாம் ஆழ வேண்டும்., எமது மொழி ஆட்சி மொழியாக வேண்டும்.

சமதர்ம நாடுகளில் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எழுத்து வடிவை ஏற்படுத்தி கொடுக்க முயற்சிகள் நடைபெறுகிறது. ஆனால் சமதர்ம ஆட்சியென்று கூறப்படும் இங்கு பழமையை வாய்ந்த தமிழ் எழுத்தை அழிக்க முயற்சிகள் நடைபெற்றுவருகிறது! இன்றைய ஆட்சியாளர் ஹிட்லர்பாணியில் சென்று கொண்டிருக்கின்றனர். ஹிட்லர் முகாம்களில் யூதர்களை அடைத்தது போல் கொம்பனித்தெரு முகாமில் முள்வேலிக்குள் தமிழர்கள் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

சமுதாயம் முழுவதும் தொழிலாளராகவிருக்கும் மலைநாட்டு தமிழர்களுக்கு இந்தசமதர்ம அரசாங்கம் செய்த நன்மை எதுவுமில்லை 20 வருடத்திற்குமுன் அமைச்சர் கொல்வினும், அமைச்சர் பீட்டர் கெனமனும் பேசிய பேச்சை ஒருதடவை திருப்பிப்பார்க்க வேண்டும்: தமிழரிடமா எதற்கு?

தமிழ் விழாவிற்கு தலைமை தாங்கிய திரு காசி ஆனந்தன் கூறியதாவது:- தமிழ்விழா என்று அடிக்கடி பலர் கூறிவருகிறார்கள் தமிழைவிழ விடக்கூடாதென்பதற்காகத்தான் நாமும் இந்த விழாவை எடுக்கிறோம் தமிழினம் தமிழ் மொழி அழிந்துள்ள நிலையில் நடைபெறும் தமிழ்விழா இப்படித்தான் நடக்கவேண்டும் கடந்தகாலத்தைப் பற்றி விழாக்களில் பெருமை பேசி வந்ததன் பலனெதுவுமில்லை.

மனிதன் மிருகத்திலும் பார்க்க எந்தநிலையில் முன்னேறியிருக்கிறான். காதல் வாழ்க்கையில் மனிதன் விவாகரத்துச் செய்கிறான் ஆனால் மிருகம் அப்படிசெய்வதில்லை. தொழில்முறையில் மனிதன் தூரதூடத்திற்கு மாறிச்செல்ல மறுக்கிறான் ஆனால் மிருகம் பலமைல் தூரத்திற்கு சென்று தனது இரையைத் தேடிக்கொள்கிறது. துப்பறிவதில் மனிதனால் முடியாதென்று கைவிடப்படுவதை பொலிஸ்நாய் துப்புத் துலக்கிவிடுகிறது. மருத்துவத்துறையில் மனிதன் டாக்டரின் உதவியை நாடுகிறான் ஆனால் பன்றியோ மருத்துவிச்சி இல்லாமல் 10 குட்டி போடுகிறது மனிதன் அறிவாலும் உள்ளத்தினாலும் தான் மிருகத்தைவிட உயர்ந்தநிலையில் இருக்கின்றான்

அதே மனிதன் தன்அறிவையின்று தவறான வழிகளில் பயன்படுத்திவிடுகிறான் மாணவர்கள் இன்று தரம் பிரிக்கப்படுகிறார்கள் சிங்கள மாணவன் 200 மார்க்ஸ் எடுத்தால் தமிழ் மாணவன் 250 மார்க்ஸ் எடுக்கவேண்டும்மாம் இது மார்க்ஸ்சீசமா?

இந்தநிலை மாறவேண்டும் தமிழன் தன்மானத்துடன் வாழ தமிழ்காய் மன்றம் உழைத்துவருகின்றது தமிழ் வாழவேண்டுமானால் அது உங்கள் கையில்தான் தங்கியிருக்கிறது.

காளைச்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் தேர்தல் சின்னத்தை ஜகஜீவன்ராம் தலைமைக்காங்கிரஸார் சின்னத்தைப் பாவிக்காமலிருக்கும் வகையில் இடைக்காலதீர்ப்பொன்றை வழங்கும்படியும் அவர்கள் இன்னொரு மனுவையும் தாக்கல் செய்திருந்தனர் இந்த மனுவை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டார் இடைக்கால தேர்தலுக்கான வேட்புமனுக்கள் அடுத்தமாதம் முதல்பகுதியில் தாக்கலாக விருப்பதால் விசாரணை தீர்ப்பை அதற்கு முன்வழங்குவது சுலபமாய் இடுக்காது என்றும்அதனாலே இச்சின்னத்தை இருகட்சிகளுமே பாவிக்க முடியாது என்று தீர்ப்பளிப்பதாகவும் தெரிவித்தது இந்தத்தீர்ப்பு திரு ஜகஜீவன்ராம் காங்கிரஸ் பாரத தேசிய காங்கிரஸ் என்று அழைத்துக் கொள்வதில் விளைவுஎதையும் ஏற்படுத்தாது என்றும் சுப்ரீம் கோர்ட் தெரிவித்தது

சர்க்காவை கேட்பார்

தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் இதுபற்றி திரு நிஜலிங்கப்பா கருத்து வெளியிடுகையில் தமது கட்சிக்கு நியாயம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார் தேர்தல் சின்னமாக தமது கட்சி சர்க்காவை கேட்கும் என்று திரு நிஜலிங்கப்பா தெரிவித்தார்.

ஐயாறன்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகிறதாம் அப்படி இருக்க நமது இந்த தெய்வீக்கலையை இலங்கையிலும் இந்தியாவிலும் பயன்படுத்தாமல் இருக்கிறோம்

மேலைநாட்டினர் இதைப் பயன்படுத்துவதைக் கண்ட பின்பாவது இங்கு பொது மக்களிடையிலும்கலைஞர்களிலும் யோகக்கலைப் பயிற்சியை ஒழுங்காக அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு முன்னோடியாக இங்கு சுவாமிஜியைக்கொண்டு சர்வதேச யோக மகாநாட்டைக் கூட்டுவது பல விதங்களிலும் நன்மையளிப்பதாகும்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு தை மாதம் 21- திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது